சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
e-Paper | 22 புதன்கிழமை ஜூலை 2026 | 22 Wednesday July 2026 | Switzerland Edition



# கனமழைக்குப் பின்னரும் சுவிட்சர்லாந்தில் நீடிக்கும் வறட்சி

சுவிட்சர்லாந்தின் பல பகுதிகளில் அண்மையில் கனமழை பெய்தபோதிலும், வறட்சி நிலை குறிப்பிடத்தக்க அளவில் குறையவில்லை என MeteoSwiss தெரிவித்துள்ளது.

ஆல்ப்ஸ் மலைப் பகுதிகளில் மழைநீர் ஓரளவு நிலத்துக்குள் சென்றுள்ளது. ஆனால் சுவிஸ் பீடபூமி மற்றும் ஜூரா மலைப்பகுதிகளில் மழை குறுகிய நேரம் மட்டுமே தனித்தனியாகப் பெய்ததால், பெரும்பாலான நீர் மண்ணின் ஆழமான பகுதிகளுக்குச் செல்லாமல் மேற்பரப்பில் வழிந்தோடியுள்ளது.

ஜூரா, வோ, பெர்ன், கிழக்கு சுவிட்சர்லாந்து மற்றும்

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...

# புதிய சுவிஸ்– ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தங்களால் குற்றங்கள் அதிகரிக்குமா?

பெர்ன் மற்றும் பிரஸல்ஸ் இடையிலான புதிய ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வந்தால், சுவிட்சர்லாந்தில் குற்றச்செயல்கள் கடுமையாக அதிகரிக்கும் என சுவிஸ் மக்கள் கட்சி (SVP) எச்சரித்துள்ளது. ஆனால் இந்தக் கூற்றை நிபுணர்கள் மறுத்துள்ளனர்.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...



# 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு ஸ்மார்ட்போன் வேண்டாம்

## சுவிஸ் முழுவதும் பரவும் Koniz திட்டம்

பெர்ன் மாநிலத்தின் Koniz பகுதியில் பெற்றோர்களால் உருவாக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஸ்மார்ட்போன் மற்றும் சமூக ஊடகக் கட்டுப்பாட்டுத் திட்டம், சுவிட்சர்லாந்தின் பிற பகுதிகளிலும் கவனத்தைப் பெற்றுள்ளது. பாசல் நகரின் Theodor ஆரம்பப் பாடசாலைப் பெற்றோர் சபையும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆர்வம் காட்டியுள்ளது.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...




NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

# ஜெர்மன் ரயில் நிலையங்களில் மதுபானத் தடை; SBB பின்பற்றாது

ஜெர்மனியிலுள்ள சுமார் 5,400 ரயில் நிலையங்களின் நடைமேடைகள் மற்றும் நிலைய மண்டபங்களில் மதுபானம் அருந்துவதைத் தடைசெய்ய Deutsche Bahn திட்டமிட்டுள்ளது. இந்தத் தடை 2026 அக்டோபர் 15ஆம் தேதிக்குள் நாடு முழுவதும் அமல்படுத்தப்படவுள்ளது.

பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், மதுபோதையால் ஏற்படும் மோதல்களைக் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என Deutsche Bahn தெரிவித்துள்ளது. அனுமதிபெற்ற நிலைய உணவகங்களில் மதுபானம் அருந்துவதற்குத் தொடர்ந்து அனுமதி வழங்கப்படும். மூடிய பைகளில் மதுபானத்தை எடுத்துச் செல்வதற்கும் தடையில்லை. ரயில்களுக்குள் மதுபானம் அருந்துவதற்கான பொதுத் தடையும் தற்போதைக்கு அறிவிக்கப்படவில்லை.

பாடன்-வூர்ட்டம்பேர்க் மாநிலத்தில் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படும் பயணி ஒருவர் ரயில் பாதுகாப்புப் பணியாளரைத் தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்து இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

மோதலின்போது ரயில் கதவு திறந்ததால், அந்தப் பணியாளர் ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து கீழே விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தடையை Deutsche Bahn பாதுகாப்புப் பிரிவினரும் ஜெர்மன் கூட்டாட்சிப் பொலிஸாரும் கண்காணிப்பார்கள்.

விதிமுறையை மீறுபவர்கள் உடனடியாக நிலையத்திலிருந்து வெளியேற்றப்படலாம். தொடர்ச்சியாக மீறினால் நிரந்தர நுழைவுத் தடையும் விதிக்கப்படலாம்.

இதற்கிடையில், சுவிட்சர்லாந்தின் SBB ரயில் நிலையங்களிலும் ரயில்களிலும் பொதுவான மதுபானத் தடையை அறிமுகப்படுத்தப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. இரவு 10 மணிக்குப் பின்னர் மதுபானம் விற்பனை செய்வதற்கான தடை தொடர்ந்து அமலில் இருக்கும்.

## 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு....

Koniz பாடசாலைகளில் மாணவர்கள் வளாகத்திற்குள் நுழையும்போது கைப்பேசிகளை அணைத்து வைக்க வேண்டும். பாடம் தொடங்கும்போது அவற்றை ஒப்படைக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட இடத்தில் வைக்க வேண்டும். பாடங்கள் முடிந்த பின்னரே கைப்பேசிகள் திருப்பி வழங்கப்படும்.

இதற்கு மேலாக, ஏழாம் வகுப்பு வரை குழந்தைகளுக்குச் சொந்தமாக ஸ்மார்ட்போன் வழங்காமல் இருப்பதற்கும், ஒன்பதாம் வகுப்பிலிருந்து மட்டுமே சமூக ஊடகங்களைப் பயன்படுத்த அனுமதிப்பதற்கும் பெற்றோர்கள் இணக்கம் தெரிவிக்கின்றனர்.

இது சட்டரீதியான தடையல்ல. பெற்றோர்கள் இணையத்தளமொன்றின் ஊடாகத் தன்னார்வமாக உறுதிமொழி வழங்கும் திட்டமாகும். மற்ற எல்லாக் குழந்தைகளிடமும் கைப்பேசி இருக்கிறது என்ற சமூக அழுத்தத்தைச் சமாளிக்க இது உதவும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Koniz பகுதியில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், 80 சதவீதமான பெற்றோர்கள் ஏழாம் வகுப்பு வரை குழந்தைகளுக்குச் சொந்த ஸ்மார்ட்போன் வழங்காமல் இருக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளனர். மேலும் 10 சதவீதமானோர் இந்த யோசனையை ஆதரித்தாலும், அவர்களது குழந்தைகளுக்கு ஏற்கெனவே கைப்பேசி வழங்கப்பட்டிருந்தது அல்லது வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தைப் பற்றிச் சுவிட்சர்லாந்து முழுவதிலிருந்தும் விசாரணைகள் வருவதால், அதன் நடைமுறைகள், அனுபவங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை Koniz பெற்றோர் குழு தொகுத்து வழங்கத் தொடங்கியுள்ளது.

## புதிய சுவிஸ்– ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தங்களால்....

2024 டிசம்பரில் சுவிட்சர்லாந்துக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் புதிய ஒப்பந்தத் தொகுப்பு நிறைவு செய்யப்பட்டது.

அது இன்னும் அங்கீகரிக்கப்படாத நிலையில், 2027ஆம் ஆண்டில் மக்கள் வாக்கெடுப்பு நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்பட்டால் சுவிட்சர்லாந்து தனது இறையாண்மையை இழந்து, பிரஸல்ஸின் கட்டுப்பாட்டுக்குள் செல்ல நேரிடும் என குங்க குற்றஞ்சாட்டுகிறது. மேலும், Schengen முறையால் குற்றவாளிகள் தடையின்றி நாட்டுக்குள் நுழைந்து குற்றங்களைச் செய்துவிட்டு விரைவாக வெளியேறுவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோமன் புர்கி தெரிவித்துள்ளார்.

எனவே சுவிட்சர்லாந்து தனது எல்லைகளில் சுயாதீனமான சோதனைகளை நடத்துவதுடன், வெளிநாட்டுக் குற்றவாளிகளை முறையாக நாடுகடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும், லோசான் பல்கலைக்கழகத்தின் ஐரோப்பிய சட்டப் பேராசிரியர் பிரான்செஸ்கோ மையானி, குற்றங்கள் அதிகரிக்கும் என்ற குங்க-யின் கூற்று சட்டபீதியாக மிகவும் மிகைப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

புதிய ஒப்பந்தங்கள் குற்றச்செயல்கள் அதிகரிக்க நேரடியாகக் காரணமாகும் என்பதற்கான உறுதியான ஆதாரம் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

## கனமழைக்குப் பின்னரும்....

சூரிச் ஏரிப் பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவுகிறது. பாசலில் வறட்சியால் மரக்கிளைகள் உலர்ந்து எளிதில் முறிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், பெரிய மரங்களின் கீழ் அமரவோ நடமாடவோ வேண்டாம் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

வரும் நாட்களிலும் வறண்ட வானிலை தொடரும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது. வார இறுதியில் மழை மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். எனினும், வறட்சியை முடிவுக்குக் கொண்டுவர இது போதுமானதாக இருக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. தொடர்ச்சியாகவும் பரவலாகவும் கணிசமான மழை பெய்தால் மட்டுமே நிலைமை நீடித்த வகையில் மேம்படும் என MeteoSwiss தெரிவித்துள்ளது. தொடர்ச்சியான வறட்சியால் விவசாயம் மற்றும் இயற்கைச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏரிகள், ஆறுகள் மற்றும் அணைகளின் நீர்மட்டமும் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது.

வலே மற்றும் மத்திய சுவிட்சர்லாந்தில் காட்டுத்தீ அபாயம் மிகவும் அதிகம் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நாடு முழுவதும் உயர்ந்த அபாயம் நிலவுகிறது. சூரிச், பாசல், ஜெனீவா, லூசேர்ன், வோ, வலே, டிசினோ, ஆர்காவ் உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களில் தற்போது தீ மூட்டுவதற்கான தடைகள் அமலில் உள்ளன.



# எல்லைத் தாண்டி பொருட்கள் கொள்வனவு; சுவிட்சர்லாந்து மக்களுக்கு இன்னும் பெரிய சேமிப்பு!

சூரிச்: சுவிட்சர்லாந்தில் வாழும் மக்கள் ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இத்தாலி போன்ற அண்டை நாடுகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவதன் மூலம் கணிசமான அளவு பணத்தைச் சேமிக்க முடியும் என்று புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

நிதிச் சேவை நிறுவனமான Wise மேற்கொண்ட ஆய்வின்படி, உணவுப் பொருட்கள் வெளிநாடுகளில் வாங்கும்போது 63 சதவீதம் வரை மலிவாக கிடைக்கின்றன.

உதாரணமாக, 250 கிராம் வெண்ணெய் ஜெர்மனியில் 63 சதவீதமும், 10 முட்டைகள் கொண்ட பெட்டி பிரான்சில் 63 சதவீதமும், 2 கிலோ ஆப்பிள்கள் இத்தாலியில் 62 சதவீதமும் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

உணவுப் பொருட்களில் அதிக சேமிப்பை வழங்கும் நாடாக ஜெர்மனி முன்னிலை வகிக்கிறது. அங்கு சராசரியாக 40 சதவீதம் வரை குறைந்த விலையில் பொருட்களை வாங்க முடிகிறது.

விளையாட்டு காலணிகள் மற்றும் சில பிரபல பிராண்டு பொருட்களும் இத்தாலி, ஜெர்மனி மற்றும் பிரான்சில் குறைந்த விலையில் கிடைக்கின்றன. ஆனால் அழகுசாதனப் பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பல சந்தர்ப்பங்களில் சுவிட்சர்லாந்தைவிட வெளிநாடுகளில் அதிக விலையிலேயே விற்கப்படுகின்றன. இருப்பினும் ஜெர்மனியில் இவ்வகை பொருட்களும் சுமார் 17 சதவீதம் மலிவாக உள்ளன.

ஆய்வாளர்கள் கூறுகையில், சுவிட்சர்லாந்தின் உயர்ந்த விலை நிலை, வலுவான சுவிஸ் பிராங்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கிடைக்கும் ஙஅகூ வரி மீளளிப்பு ஆகியவை வெளிநாட்டு ஷாப்பிங்கை அதிகம் கவர்ச்சிகரமாக மாற்றுகின்றன.

மேலும், ஒருவர் ஒரு நாளில் 150 சுவிஸ் பிராங்கிற்குக் குறைவான பொருட்களை வாங்கி சுவிட்சர்லாந்துக்கு கொண்டுவந்தால், கூடுதல் சுவிஸ் ஙஅகூ செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
ATTA RICE
BASMATI RICE
TATA TEA
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


TAMIL ECOAM
STEDO
SWISS TAMIL ECONOMICS DEVELOPMENT ORGANIZATION
SWISS TAMIL ECONOMICS
DEVELOPMENT ORGANIZATION
உழைப்பால் இணைவோம்,
உயர்வாள் நிமிர்வோம்!
சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் வர்த்தகப் பெருமக்கள்,
இளம்தொழில்முனைவோர் மற்றும் புதிய
யோசனைகளுடன் முதலிட்டாளர்களை
ஒன்றிணைக்க செயற்படும் STEDO வில்
நீங்கள் இன்னும்
இணைந்து கொள்ளவில்லையா?
STEDOவில் இணைவோம் சாதிப்போம்
வணிக இணைப்பு வாய்ப்புகள்
இளம் தொழில் முனைவோருக்கு ஆதரவு
புதிய யோசனைகளுடன் முதலிட்டாளர்களுக்கான வாய்ப்புகள்
தொடர்புகளுக்கு
+41 79 591 05 55
+41 79 218 70 75
www.stedo.ch
hello@stedo.ch
இணைவோம்! வளர்வோம்! உலகம் நோக்கி முன்னேறுவோம்!



# ஐரோப்பிய வெப்ப அலையால்

## 12,000 க்கும் அதிகமான உயிரிழப்புகள்!

ஐரோப்பாவை ஜூன் மாதம் தாக்கிய கடுமையான வெப்ப அலையின்போது, குறைந்தது 12,000 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக AFP செய்தி நிறுவனம் மேற்கொண்ட தரவுப் பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது.

ஒன்பது ஐரோப்பிய நாடுகளின் ஆரம்பகட்ட மரணப் பதிவுகளின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பல நாடுகளின் முழுமையான புள்ளிவிவரங்கள் வெளியாகும்போது, உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாத வெப்ப அலையின்போது பல ஐரோப்பிய நாடுகளில் வரலாறு காணாத வெப்பநிலை பதிவானது. பிரித்தானியா மற்றும் சுவிட்சர்லாந்தில் இதுவரை பதிவான ஜூன் மாத வெப்பநிலைச் சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, லக்சம்பர்க், நெதர்லாந்து, ஸ்பெயின் மற்றும் சுவிட்சர்லாந்தில் பதிவான மேலதிக மரணங்களை AFP ஆய்வு செய்துள்ளது. அந்த ஏழு நாடுகளில் மட்டும் சுமார் 10,000 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, ஜூன் 18 முதல் 28ஆம் திகதிவரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் மேலும் சுமார் 2,200 உயிரிழப்புகள் வெப்ப அலையுடன் தொடர்புடையதாக பிரித்தானிய வானிலை அலுவலகத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மேலதிக உயிரிழப்புகள் என்பது, வழக்கமாக எதிர்பார்க்கப்படும் மரண எண்ணிக்கையைவிட குறிப்பிட்ட காலப்பகுதியில் கூடுதலாகப் பதிவான மரணங்களைக் குறிக்கிறது. எனினும் இவை ஆரம்பகட்டப் புள்ளிவிவரங்கள் என்பதால், அனைத்து மரணங்களும் வெப்பத்தால் நேரடியாக ஏற்பட்டவை என்று உடனடியாக முடிவுசெய்ய முடியாது.

24 நாடுகளில் சுமார் 40 கோடி மக்களின் அதிகாரபூர்வத் தரவுகளைப் பயன்படுத்தும் ஐரோப்பிய மரணக் கண்காணிப்பு அமைப்பான EuroMOMO, ஜூன் மாத இறுதி வாரத்தில் 14,260 மேலதிக உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ளது. கிழக்கு ஐரோப்பாவின் சில பகுதிகள் இந்தக் கணக்கில் இடம்பெறவில்லை.

EuroMOMO தனது ஐரோப்பியக் கண்காணிப்பை ஆரம்பித்த 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஜூன் மாதத்தின் ஒரு வாரத்தில் பதிவான மிக உயர்ந்த மேலதிக மரண வீதம் இதுவாகும். இருப்பினும் அண்மைய தரவுகள் உறுதிப்படுத்தப்படுவதற்கு சுமார் நான்கு வாரங்கள் தேவைப்படுவதால், அவற்றை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

நாடுவாரியாகப் பார்க்கும்போது, ஜெர்மனியில் ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை 5,780 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இது முந்தைய நான்கு ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடப்பட்ட கணக்காகும்.

பிரான்சில் முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் 2,025 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகின. பெல்ஜியத்தில் ஜூன் 18 முதல் ஜூலை முதலாம் திகதிவரை 1,747 மேலதிக மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 750 உயிரிழப்புகள் ஜூன் 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்களில் மட்டும் இடம்பெற்றுள்ளன.

ஸ்பெயினில் ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை



# ஐரோப்பிய வெப்ப அலையால்
# 12,000 க்கும் அதிகமான உயிரிழப்புகள்!

610 மரணங்கள் வெப்பத்துடன் தொடர்புடையவை என அந்நாட்டின் கண்காணிப்பு அமைப்பு மதிப்பிட்டுள்ளது. அவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

அதே காலப்பகுதியில் நெதர்லாந்தில் சுமார் 600 மேலதிக உயிரிழப்புகளும், சுவிட்சர்லாந்தில் 220 உயிரிழப்புகளும், லக்சம்பர்க்கில் 23 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

கோடைக்காலம் இன்னும் முடிவடையவில்லை என்று உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் ஹென்றி பி. குளூகே எச்சரித்துள்ளார். வெப்பத்தை வெறும் வானிலை நிகழ்வாக அல்லாமல், ஒரு பொது சுகாதார அவசரநிலையாக அரசாங்கங்கள் கருத வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய அதிக வெப்பநிலை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றம் இல்லாமல் ஜூன் மாதத்தில் நிகழ்ந்திருப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்று World Weather Attribution விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரங்கள் இன்னும் தற்காலிகமானவை. இருப்பினும் ஆண்டுதோறும் தீவிரமடைந்து வரும் வெப்ப அலைகள், வெறும் வானிலைப் பிரச்சினை மட்டுமல்ல-ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறிக்கும் மிகப்பெரிய சுகாதார அச்சுறுத்தல் என்பதையே அவை வெளிப்படுத்துகின்றன.

ஐரோப்பாவை ஜூன் மாதம் தாக்கிய கடுமையான வெப்ப அலையின்போது, குறைந்தது 12,000 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக AFP செய்தி நிறுவனம் மேற்கொண்ட தரவுப் பகுப்பாய்வில் தெரியவந்துள்ளது.

ஒன்பது ஐரோப்பிய நாடுகளின் ஆரம்பகட்ட மரணப் பதிவுகளின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பல நாடுகளின் முழுமையான புள்ளிவிவரங்கள் வெளியாகும்போது, உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாத வெப்ப அலையின்போது பல ஐரோப்பிய நாடுகளில் வரலாறு காணாத வெப்பநிலை பதிவானது. பிரித்தானியா மற்றும் சுவிட்சர்லாந்தில் இதுவரை பதிவான ஜூன் மாத வெப்பநிலைச் சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, லக்சம்பர்க், நெதர்லாந்து, ஸ்பெயின் மற்றும் சுவிட்சர்லாந்தில் பதிவான மேலதிக மரணங்களை AFP ஆய்வு செய்துள்ளது. அந்த ஏழு நாடுகளில் மட்டும் சுமார் 10,000 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, ஜூன் 18 முதல் 28ஆம் திகதிவரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் மேலும் சுமார் 2,200 உயிரிழப்புகள் வெப்ப அலையுடன் தொடர்புடையதாக பிரித்தானிய வானிலை அலுவலகத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மேலதிக உயிரிழப்புகள் என்பது, வழக்கமாக எதிர்பார்க்கப்படும் மரண எண்ணிக்கையைவிட குறிப்பிட்ட காலப்பகுதியில் கூடுதலாகப் பதிவான மரணங்களைக் குறிக்கிறது. எனினும் இவை ஆரம்பகட்டப் புள்ளிவிவரங்கள் என்பதால், அனைத்து மரணங்களும் வெப்பத்தால் நேரடியாக ஏற்பட்டவை என்று உடனடியாக முடிவுசெய்ய முடியாது.

24 நாடுகளில் சுமார் 40 கோடி மக்களின் அதிகாரபூர்வத் தரவுகளைப் பயன்படுத்தும் ஐரோப்பிய மரணக் கண்காணிப்பு அமைப்பான EuroMOMO, ஜூன் மாத இறுதி வாரத்தில் 14,260 மேலதிக உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ளது. கிழக்கு ஐரோப்பாவின் சில பகுதிகள் இந்தக் கணக்கில் இடம்பெறவில்லை.

EuroMOMO தனது ஐரோப்பியக் கண்காணிப்பை ஆரம்பித்த 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஜூன் மாதத்தின் ஒரு வாரத்தில் பதிவான மிக உயர்ந்த மேலதிக மரண வீதம் இதுவாகும். இருப்பினும் அண்மைய தரவுகள் உறுதிப்படுத்தப்படுவதற்கு சுமார் நான்கு வாரங்கள் தேவைப்படுவதால், அவற்றை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

நாடுவாரியாகப் பார்க்கும்போது, ஜெர்மனியில்




# ஐரோப்பிய வெப்ப அலையால்
## 12,000 க்கும் அதிகமான உயிரிழப்புகள்!

ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை 5,780 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இது முந்தைய நான்கு ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடப்பட்ட கணக்காகும்.

பிரான்சில் முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் 2,025 மேலதிக உயிரிழப்புகள் பதிவாகின. பெல்ஜியத்தில் ஜூன் 18 முதல் ஜூலை முதலாம் திகதிவரை 1,747 மேலதிக மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 750 உயிரிழப்புகள் ஜூன் 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்களில் மட்டும் இடம்பெற்றுள்ளன.

ஸ்பெயினில் ஜூன் 22 முதல் 28ஆம் திகதிவரை 610 மரணங்கள் வெப்பத்துடன் தொடர்புடையவை என அந்நாட்டின் கண்காணிப்பு அமைப்பு மதிப்பிட்டுள்ளது. அவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

அதே காலப்பகுதியில் நெதர்லாந்தில் சுமார் 600 மேலதிக உயிரிழப்புகளும், சுவிட்சர்லாந்தில் 220 உயிரிழப்புகளும், லக்சம்பர்க்கில் 23 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

கோடைக்காலம் இன்னும் முடிவடையவில்லை என்று உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் ஹென்றி பி. குளுகே எச்சரித்துள்ளார். வெப்பத்தை வெறும் வானிலை நிகழ்வாக அல்லாமல், ஒரு பொது



சுகாதார அவசரநிலையாக அரசாங்கங்கள் கருத வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய அதிக வெப்பநிலை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றம் இல்லாமல் ஜூன் மாதத்தில் நிகழ்ந்திருப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்று World Weather Attribution விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரங்கள் இன்னும் தற்காலிகமானவை. இருப்பினும் ஆண்டுதோறும் தீவிரமடைந்து வரும் வெப்ப அலைகள், வெறும் வானிலைப் பிரச்சினை மட்டுமல்ல-ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறிக்கும் மிகப்பெரிய சுகாதார அச்சுறுத்தல் என்பதையே அவை வெளிப்படுத்துகின்றன.



# Crans- Montana விவகாரம்: சுவிட்சர்லாந்துக்கு அழுத்தம் கொடுக்கும் இத்தாலியின் கடும் தண்டனைகள்

இத்தாலியின் Genoa நகரில் 2018ஆம் ஆண்டு 43 பேரைப் பலிகொண்ட Morandi பாலம் இடிந்து விழுந்த சம்பவம் தொடர்பாக, எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நீதிமன்றம் கடுமையான சிறைத்தண்டனைகளை விதித்துள்ளது.

இத்தாலிய நெடுஞ்சாலை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் 12 ஆண்டுகளும், பராமரிப்புக்குப் பொறுப்பான முன்னாள் அதிகாரி 11 ஆண்டுகளும் சிறைத்தண்டனை பெற்றுள்ளனர். மேலும் பலருக்கும் பல ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் இவை முதற்கட்டத் தீர்ப்புகள் என்பதால் இன்னும் இறுதித் தீர்ப்பாகவில்லை.

Morandi பால விபத்தும் Crans&Montana தீ விபத்தும் வெவ்வேறு சம்பவங்களாக இருந்தாலும், பாதுகாப்பு விதிமுறைகளைப் புறக்கணித்தமை, போதிய கண்காணிப்பின்மை மற்றும் அலட்சியமாகச் செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுகளில் ஒற்றுமை காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் சுவிஸ் குற்றவியல் சட்டத்தின் கீழ், Crans&Montana வழக்கில் தற்போது அறியப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அதிகபட்சமாக நான்கரை ஆண்டுகள் வரை மட்டுமே சிறைத்தண்டனை கிடைக்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.



இதனால், குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டாலும் தண்டனை குறைவாக இருந்தால், குறிப்பாக இத்தாலியில் கடும் எதிர்ப்பு எழலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுவிட்சர்லாந்தின் அலட்சியக் குற்றங்களுக்கான தண்டனைகள் ஏன் இத்தாலியைவிடக் குறைவாக உள்ளன என்பதை சுவிஸ் அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டிய அழுத்தமும் உருவாகியுள்ளது.



# ஆசிய உணவுக் கடைகளின் காய்கறிகளில்

# அதிக பூச்சிக்கொல்லி எச்சங்கள்

## மூன்றில் ஒரு மாதிரி நிராகரிப்பு

சுவிட்சர்லாந்தின் Solothurn மாநிலத்தில் ஆசிய உணவுக் கடைகளில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளில் நடத்தப்பட்ட பரிசோதனையில், மூன்றில் ஒரு மாதிரி சட்டத் தரநிலைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரியவந்துள்ளது.

Solothurn உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் 2025ஆம் ஆண்டறிக்கையின்படி, பத்து விற்பனை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட 38 காய்கறி மாதிரிகள் ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் மூன்றில் ஒரு பகுதி, சுவிட்சர்லாந்தில் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான பூச்சிக்கொல்லி எச்சங்களைக் கொண்டிருந்தது.

துளசி, Stinkdistel எனப்படும் ஒருவகைக் கீரை, பீன்ஸ், பச்சை மிளகாய், ஏலக்காய், நைட்ஷேட் வகைக் கீரை, வெண்டைக்காய் மற்றும் நீர்க்கீரை உள்ளிட்ட பல பொருட்களில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டன. சில மாதிரிகளில் ஒரே நேரத்தில் பல்வேறு பூச்சிக்கொல்லி எச்சங்கள் காணப்பட்டதாகவும், இத்தகைய கலப்பு மாசுபாடு குறிப்பாகச் சிக்கலானது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு பீன்ஸ் மாதிரியில் நிக்கோட்டின் மற்றும் Triazophos என்ற பூச்சிக்கொல்லி கண்டுபிடிக்கப்பட்டது. நுகர்வோருக்கு உடனடி சுகாதார ஆபத்து ஏற்படுவதற்கான வாய்ப்பை நிராகரிக்க முடியாததால், அதிகாரிகள் அவசர நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட இறக்குமதியாளருக்கு எதிராகக் குற்றவியல் புகார் பதிவு செய்துள்ளனர். ஆசிய நாடுகளில் சட்டபூர்வமாகப் பயன்படுத்தப்படும் சில பூச்சிக்கொல்லிகள், சுவிட்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடைசெய்யப்பட்டுள்ளதே இந்தப் பிரச்சினைக்கான முக்கிய காரணம் என்று Solothurn மாநில வேதியியலாளர் Urs Ackermann தெரிவித்துள்ளார்.

கடைகள் இடைத்தரகர் இல்லாமல் காய்கறிகளை நேரடியாக இறக்குமதி செய்யும்போது பிரச்சினைகள் அதிகம் ஏற்படுவதாகவும், அதற்கு உணவுப் பாதுகாப்பு விதிகள் தொடர்பான போதிய நிபுணத்துவம் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காய்கறிகள் எந்த நாட்டிலிருந்து, எந்த இறக்குமதியாளர் மூலம் கொண்டுவரப்பட்டன என்பதை விற்பனை நிலையங்களிடம் கேட்டு அறிந்துகொள்ளுமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உணவுக் கடைகள் அனுபவமுள்ள சுவிஸ் இறக்குமதியாளர்கள் மூலம் பொருட்களைப் பெறுவதும் பாதுகாப்பானதாக இருக்கும் என அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர்.




# விருந்தினர் வாகனத் தரிப்பிடம் பயன்படுத்தினால் பொலிஸார் அபராதம் விதிக்க முடியுமா?

## சுவிஸ் உச்ச நீதிமன்றத்தின் முக்கியத் தீர்ப்பு

சுவிட்சர்லாந்தில் Besucherparkplatz எனக் குறிக்கப்பட்ட விருந்தினர் வாகனத் தரிப்பிடத்தை, அந்தக் கட்டிடத்திற்குச் சம்பந்தமில்லாத ஒருவர் பயன்படுத்துவது மட்டும் சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமல்ல என்று சுவிஸ் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

Geneva மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர், விருந்தினர் வாகனத் தரிப்பிடம் என்ற அறிவிப்புப் பலகையும் தரை அடையாளமும் கொண்ட ஓரிடத்தில் தனது வாகனத்தை நிறுத்தியதற்காக 40 பிராங்க் அபராதம் விதிக்கப்பட்டார். மாநில நீதிமன்றங்கள் இதனைப் போக்குவரத்து விதிமீறலாகக் கருதின. ஆனால் அந்த நபர், வாகனம் நிறுத்தத் தடை என்ற அதிகாரபூர்வச் சாலைச் சமிக்ஞை இல்லாத நிலையில், விருந்தினர் தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தியது சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய செயல் அல்ல என்று வாதிட்டார். இதையடுத்து அவர் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். வாகனத் தரிப்பிடமொன்று பொதுப் போக்குவரத்துக்குத் திறந்திருக்கும் இடமாக இருந்தால், பொலிஸாருக்கு அங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருக்கலாம் என்பதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இருப்பினும் Besucher என்ற பலகை அல்லது தரை அடையாளத்தை மீறுவது மட்டும் தானாகவே குற்றவியல் போக்குவரத்து விதிமீறலாக மாறாது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. அதாவது, யோகா நிலையத்திற்குச் செல்லும் ஒருவர் அருகிலுள்ள நிறுவனத்தின் விருந்தினர் தரிப்பிடத்தையோ, பெற்றோரைப் பார்க்கச் செல்லும் ஒருவர் அடுத்த கட்டிடத்தின் விருந்தினர் தரிப்பிடத்தையோ பயன்படுத்தியதற்காக இந்தக் காரணத்தின் அடிப்படையில் மட்டும் பொலிஸார் அபராதம் விதிக்க முடியாது.

எனினும் இந்தத் தீர்ப்பு, விருந்தினர் தரிப்பிடங்களை யாரும் கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தலாம் என்று பொருள்படாது. நில உரிமையாளர் அல்லது கட்டிட நிர்வாகம் தனியார் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடும். அதிகாரபூர்வ வாகனம் நிறுத்தத் தடை அறிவிப்பு அல்லது நீதிமன்றத் தடையுத்தரவு இருந்தால் வேறு சட்ட விளைவுகளும் ஏற்படலாம்.

# சுவிட்சர்லாந்தின் முகமூடி தடை:




# அதிகம் சிக்குவது புர்கா அணிந்த பெண்களல்ல: கால்பந்து ரசிகர்களே!

சுவிட்சர்லாந்தில் பொதுவாக புர்கா தடை என அழைக்கப்படும் முகத்தை மறைக்கும் ஆடைகளுக்கான சட்டத்தில், Zrich மாநிலத்தில் அதிகம் சிக்கியவர்கள் புர்கா அல்லது நிகாப் அணிந்த பெண்கள் அல்ல; முகமூடி அணிந்த கால்பந்து ரசிகர்களே எனத் தெரியவந்துள்ளது.

2021ஆம் ஆண்டு நடைபெற்ற மக்கள் வாக்கெடுப்பில் இந்தத் தடைக்கு சுவிஸ் வாக்காளர்கள் ஒப்புதல் அளித்தனர். அதனைத் தொடர்ந்து, 2025ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சட்டம் நடைமுறைக்கு வந்தது.

பொது இடங்களில் புர்கா மற்றும் நிகாப் மூலம் முகத்தை மறைப்பது மட்டுமன்றி, ஆர்ப்பாட்டங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் முகமூடி, துணி அல்லது ஆச்டுச்ஞிடுச்திச் அணிந்து முகத்தை அடையாளம் காண முடியாதபடி மறைப்பதும் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து Zrich மாநிலப் பொலிஸார், புர்கா அல்லது நிகாப் தொடர்பாக இரண்டு அபராதங்களை மட்டுமே விதித்துள்ளனர். முகத்தை மறைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பாக மேலும் இரண்டு அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ளன.

Zrich நகரப் பொலிஸார் புர்கா அல்லது நிகாப் அணிந்த பெண்களுக்கு நான்கு அபராதங்களை விதித்துள்ளனர். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் தொடர்பாக மேலும் இரண்டு அபராதங்களும் பதிவாகியுள்ளன. ஆனால் முறையான சட்ட நடவடிக்கைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட வழக்குகளில் பெரும்பாலானவை கால்பந்து ரசிகர்களுடன் தொடர்புடையவை. 2025ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து Zrich அதிகாரிகள் முகத்தை மறைக்கும் தடையை மீறியதாக 83 விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அவற்றில் ஒரே ஒரு வழக்கு மட்டுமே புர்கா அல்லது நிகாப் தொடர்புடையது. எஞ்சிய 82 வழக்குகளும் கால்பந்து ஆதரவாளர்களுடன் தொடர்புடையவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை மீறுவோருக்கு பொலிஸார் சம்பவ இடத்திலேயே 100 சுவிஸ் பிராங்க் அபராதம் விதிக்க முடியும். அதனை ஏற்க மறுத்து வழக்கு முறையான விசாரணைக்குச் சென்றால், அதிகபட்சமாக 1,000 பிராங்க் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

சுவிட்சர்லாந்தைத் தவிர Austria, Belgium, Denmark மற்றும் Netherlands ஆகிய நாடுகளிலும் இதேபோன்ற முகத்தை மறைக்கும் தடைகள் நடைமுறையில் உள்ளன.



# 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குச் சரிந்த சுவிஸ் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்

சுவிட்சர்லாந்தின் நீர்த்தேக்கங்கள் தற்போது 46 சதவீதம் மட்டுமே நிரம்பியுள்ளன. கடந்த 20 ஆண்டுகளின் இதே காலச் சராசரியைவிட இது 16.4 சதவீதப் புள்ளிகள் குறைவாகும்.

குளிர்காலத்தில் குறைந்த பனிப்பொழிவு மற்றும் தற்போது நிலவும் வறட்சி இதற்கான முக்கிய காரணங்களாகும். 1864ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான மிகவும் வறண்ட வசந்தகாலங்களில் ஒன்றாக 2026 அமைந்துள்ளது.

இருப்பினும் உடனடி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாது என மத்திய மின்சார ஆணையம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் மாதங்களின் மழைப்பொழிவைப் பொறுத்தே நிலைமை அமையும்.

தற்போதைய வெப்பத்தால் பனிப்பாறைகள் உருகி சில நீர்த்தேக்கங்களுக்கு நீர் கிடைக்கிறது. ஆனால் பனிப்பாறைகள் தொடர்ந்து சுருங்குவதால், எதிர்காலத்தில் இந்த நீர்வரத்து கணிசமாகக் குறையலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# 6 ஆண்டுகளுக்குப் பிறகு சுவிட்சர்லாந்துக்கு வெற்றி

## Mauro Schmid சாதனை

Tour de France சைக்கிளோட்டப் போட்டியின் 13ஆவது கட்டத்தில் Zrichla சேர்ந்த Mauro Schmid வெற்றிபெற்றுள்ளார்.

206 கிலோமீற்றர் தூரம் கொண்ட இவ்வாண்டின் மிக நீண்ட கட்டத்தின் இறுதியில், தன்னுடன் முன்னிலையில் வந்த கொலம்பியாவின் Harold Tejadaவை Belfort நகரில் நடைபெற்ற இறுதி வேகப் போட்டியில் அவர் தோற்கடித்தார்.

26 வயதான Schmidiß வாழ்க்கையில் இதுவே மிகப்பெரிய வெற்றியாகும். Marc Hirschiயின் வெற்றிக்குப் பின்னர், சுமார் ஆறு ஆண்டுகளில் Tour de France கட்டமொன்றை வென்ற முதல்



சுவிஸ் வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

பிரித்தானியாவின் Tom Pidcock மூன்றாவது இடத்தைப் பெற்றார். ஒட்டுமொத்தத் தரவரிசையில் Tadej Pogaar தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளார்.



# ஸ்ட். மோரிட்ஸின் புதிய நகராட்சித் தலைவராக அட்ரியானோ இசெப்பி தேர்வு

கிரௌபுண்டன் (Graubnden) மாநிலத்தின் ஸ்ட். மோரிட்ஸ் (St. Moritz) நகராட்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்றுத் தேர்தலில், கட்சி சார்பற்ற வேட்பாளர் அட்ரியானோ இசெப்பி (Adriano Iseppi) புதிய நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

53 வயதான இசெப்பி 582 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு அடுத்தபடியாக சுதந்திர ஜனநாயகக் கட்சியை (FDP) சேர்ந்த லியாண்ட்ரோ டெஸ்டா (Leandro Testa) 514 வாக்குகள் பெற்றார்.

முதல் சுற்றுத் தேர்தலிலேயே இசெப்பி 643 வாக்குகள் பெற்று அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும், வெற்றிக்குத் தேவையான முழுமையான பெரும்பான்மையை 59 வாக்குகள் குறைவாக பெற்றதால் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடத்தப்பட்டது.

நீண்டகாலமாக SRF தொலைக்காட்சியின் குறுக்கு நாட்டுப் பனிச்சறுக்கு (Cross&country Skiing) விளையாட்டு நிபுணராகப் பணியாற்றியுள்ள இசெப்பி, ஸ்ட். மோரிட்ஸுக்கு வெளியேயும் நன்கு அறியப்பட்டவர்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணம் குறித்து அவர் கூறுகையில், ஓவர்கங்கடின் (Oberengadin) பகுதியில் 13 ஆண்டுகள் வாழ்ந்தபின், ஸ்ட். மோரிட்ஸ் நகரத்திற்கும் முழு பள்ளத்தாக்கிற்கும் இன்னும் அதிகமாக சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உருவானது என்று தெரிவித்தார்.

புதிய தலைவராக தனது முக்கிய முன்னுரிமையாக கிரேவாஸ் (Grevas) பள்ளி விரிவாக்கத் திட்டத்தை அவர் குறிப்பிட்டார். பல ஆண்டுகளாக தாமதமாகி வந்த இந்த முக்கிய திட்டத்தை, அனைவருடனும் இணைந்து நடைமுறைசார் தீர்வுடன் விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அட்ரியானோ இசெப்பி 2027 ஜனவரி 1ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக பதவியேற்கிறார். அவர், மூன்றாவது முறையாக போட்டியிடாமல் விலகிய தற்போதைய நகராட்சித் தலைவரும், சூரிக் நகரத்தைச் சேர்ந்த பிரபல பொழுதுபோக்கு கலைஞருமான கிறிஸ்டியன் யோட் ஜென்னி (Christian Jott Jenny) அவர்களின் இடத்தைப் பொறுப்பேற்கிறார்.





நவீனன்

# வெலிக்கடை படுகொலையும் கறுப்பு ஜூலையின் இனவாதமும்!

கறுப்பு ஜூலை இனக்கலவரம் என்ற போர்வைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான இனப்படுகொலை நிகழ்வாகும். ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக் கப்பட்ட முறையும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர் வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாற்பத்தொரு ஆண்டுகளை கடக்கும் கறுப்பு ஜூலையும், வெலிக்கடை சிறைப் படுகொலையின் சூத்திரதாரிகள் இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப்படு






கொலையான கறுப்பு ஜூலையின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும். நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலைப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப் படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாக கற்று அறிய வேண்டும்.

### 1983, ஜூலை 23:

1983, ஜூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப்படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப்படுகொலையாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன. 1983 கருப்பு யூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

### இனப்படுகொலை திட்டமிடப்பட்டதா?

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே. ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்துவிட்டது. உண்மையில் இக்கோர





கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதாரபீதியாகவும், நில உரிமை பீதியாகவும், மொழி பீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப்போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

**தரப்படுத்தலும் மாணவர் எழுச்சியும்:**

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை




என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட 'தரப்படுத்தல் என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது. தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

**வெலிக்கடை சிறைப் படுகொலை :**

ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.


தங்கதுரை

குட்டிமணி

ஜெகன்

ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!

இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28ம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர். சிங்கள இன வெறியர்கள், தமிழ் இளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல்நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து 'சில்' அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சுவிட்சர்லாந்தின் தேசிய தினத்தில் பட்டாசுகளுக்குத் தடை விதிக்கப்படுமா?

சுவிட்சர்லாந்தின் பெரும்பாலான பகுதிகளில் காட்டுத்தீ அபாயம் அதிகம் முதல் மிக அதிகம் என்ற நிலையை எட்டியுள்ளது. நீடிக்கும் வறட்சியால் பல இடங்களில் தீ மூட்டுவதற்கான தடைகள் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஆகஸ்ட் முதலாம் திகதி தேசிய தினத்தில் பட்டாசுகளை வெடிக்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

Chur நகரம் மறு அறிவித்தல்வரை பட்டாசுத் தடையை ஏற்கனவே அறிவித்துள்ளது. Bern மாநிலம் அடுத்த வாரம் முடிவெடுக்கவுள்ளது. காடுகள் மட்டுமன்றி அறுவடை செய்யப்பட்ட உலர்ந்த வயல்களிலும் தீ பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மைய இடியுடன் கூடிய மழையின் போது சில இடங்களில் 30 மில்லிமீற்றர் அல்லது அதற்கு அதிகமான மழை பெய்துள்ளது. ஆனால் பெரும்பாலான பகுதிகளில் பத்து மில்லிமீற்றருக்கும் குறைவாகவே மழை பதிவானதுடன், சில இடங்கள் முற்றிலும் வறண்டே காணப்பட்டதாக MeteoSwiss தெரிவித்துள்ளது. தீத்தடைகளை நீக்குவதற்கு இந்த மழை போதுமானதல்ல. அடுத்த வாரம் பெரும்பாலும் வறண்ட வானிலை நிலவும் என்பதால், காட்டுத்தீ அபாயம் மேலும் அதிகரிக்கலாம்.

ஜுலை இறுதியில் ஈரப்பதமான வானிலை உருவாக வாய்ப்பிருந்தாலும், முன்னறிவிப்பில் இன்னும் நிச்சயமற்ற நிலை காணப்படுகிறது. வறட்சி முடிவடைய நாடு முழுவதும் பல நாட்களுக்குத் தொடர்ச்சியாகக் கன மழை பெய்ய வேண்டும். ஆனால் அத்தகைய மழைக்கான அறிகுறிகள் தற்போது இல்லை.

இதனால் ஆகஸ்ட் முதலாம் திகதி பட்டாசுகளுக்கு மேலும் பல மாநிலங்கள் மற்றும் நகராட்சிகள் தடை விதிக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளது. பொதுமக்கள் தங்கள் பகுதியில் வெளியாகும் அதிகாரபூர்வ அறிவிப்புகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.




# சுவிட்சர்லாந்தின் 735 வது தேசிய தின விழா

## இன்டர்லாகனில் சிறப்பு கொண்டாட்டம்

சுவிட்சர்லாந்தின் 735வது தேசிய தினத்தை முன்னிட்டு, வருகிற ஜூலை 31, 2026 அன்று, பேர்ன் மாநிலத்தின் இன்டர்லாகன் அருகிலுள்ள மாட்டன் பகுதியில் அமைந்துள்ள டெல் திறந்தவெளி அரங்கில் (Tell-spiel&Areal) பொதுமக்களுக்கான பிரம்மாண்ட தேசிய தின விழா நடைபெறவுள்ளது.

Pro Schweiz அமைப்பு ஏற்பாடு செய்யும் இந்த விழா, பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெறும். இதில் பங்கேற்க பொதுமக்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம். எனினும், விருப்பமுள்ளவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள், Neutralittsinitiative JA எனப்படும் சுவிட்சர்லாந்தின் நிரந்தர நடுநிலைக் கொள்கையை வலுப்படுத்தும் மக்கள் முன்மொழிவுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விழாவின் சிறப்பு விருந்தினராக முன்னாள் கூட்டாட்சி அமைச்சர் கிறிஸ்டோப் புளோக்கர் கலந்துகொண்டு, வில்லியம் டெல் – சுதந்திரம் – நடுநிலைமை: 1291 முதல் சுவிட்சர்லாந்தின் பயணம் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.

மேலும், Pro Schweiz அமைப்பின் துணைத் தலைவர் வால்டர் வோப்மான், சுவிட்சர்லாந்தின் நடுநிலைமைக்கு ஆம் என்ற தலைப்பிலும், நிர்வாக உறுப்பினர் அட்ரியன் அம்ஸ்டுட்ஸ், மக்களே நாட்டின் உண்மையான தலைவர்கள் என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

இதனுடன், தேசிய கீதம் பாடுதல், வில்லியம் டெல் வரலாற்றை நினைவுகூரும் நிகழ்ச்சி, பாரம்பரிய இசை மற்றும் உணவு விருந்து உள்ளிட்ட பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

சுவிட்சர்லாந்தின் வரலாறு, சுதந்திரம், நடுநிலைமை மற்றும் தேசிய பாரம்பரியத்தை போற்றும் இந்த தேசிய தின விழாவில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் திரளாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



# பாலியல் குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஆயுள் தண்டனை கோரிக்கை

பேர்ன்: சுவிட்சர்லாந்தின் ஆர்காவ் மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் க்ஈஇ கட்சி மாநில நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது தொடரப்பட்டுள்ள பல்வேறு பாலியல் குற்ற வழக்கில், அவருக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்குமாறு அரசுத் தரப்பு நீதிமன்றத்தில் கோரியுள்ளது.

57 வயதுடைய குற்றஞ்சாட்டப்பட்டவர், பல பெண்களுக்கும் ஒரு சிறுமிக்கும் அவர்களுக்குத் தெரியாமல் மயக்க மருந்து (KO drops) கொடுத்து, பின்னர் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பல முறை கொலை முயற்சி, பல முறை பாலியல் பலாத்காரம், பாலியல் வன்கொடுமை, சிறார்களுடன் பாலியல் செயலில் ஈடுபட்டமை உள்ளிட்ட பல்வேறு கடுமையான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுகளுக்கான முக்கிய ஆதாரங்களாக ஏராளமான புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை அரசுத் தரப்பு கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறுமியுடன் இருந்ததை அவரது தாயார் நேரில் கண்டு போலீசாருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தற்போது வாடன் (Baden) மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. எனினும், நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டபீதியாக குற்றமற்றவர் என்ற குற்றமற்றவர் என்ற முன்கணிப்பு (Presumption of Innocence) நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.



# ஆசிய கொம்புத் தேனீகளை கண்டால் உடனடியாக தெரிவிக்குமாறு சூரிக் நகராட்சி அவசர அறிவிப்பு

சுவிட்சர்லாந்தில் வேகமாக பரவி வரும் ஆசிய கொம்புத் தேனீ (Asian Hornet & Vespa velutina) இனத்தை கட்டுப்படுத்தும் முயற்சியாக, சூரிக் நகராட்சி பொதுமக்கள் உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த கொம்புத் தேனீ அல்லது அதன் கூடு காணப்பட்டால், மத்திய அரசின் இணைய தளத்தில் உடனடியாக பதிவு செய்யுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக, வீட்டின் கூரை ஓரங்கள், ஜன்னல் வெளிப்புற திரைகள், வேலிகள் மற்றும் புதர்களின் அருகில் இவை ஆரம்பக் கூடுகளை அமைக்கும். ஆகஸ்ட் மாதம் முதல் மரங்களின் உயரத்தில் பெரிய கூடுகளை அமைப்பதால், அவற்றை அகற்றுவது மிகவும் சிரமமாகிவிடும்.

### ஆசிய கொம்புத் தேனீயை எவ்வாறு அடையாளம் காணலாம்?

இது பெரும்பாலும் கருப்பு நிற உடல், ஆரஞ்சு நிற முகம் மற்றும் மஞ்சள் நுனியுள்ள கால்கள் கொண்டதாக இருக்கும். ஐரோப்பிய கொம்புத் தேனீ அதற்கு மாறாக மஞ்சள்-பழுப்பு நிறத்துடனும் கருமை கால்களுடனும் காணப்படும்.

இந்த ஆக்கிரமிப்பு இனம் தேனீக்கள் மற்றும் உயிரியல் பல்வகைமைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தேனீக்களின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், இந்த இனத்தின் பரவல் சுற்றுச்சூழலுக்கு குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் சூரிக் பகுதியில் 27 முறை ஆசிய கொம்புத் தேனீ காணப்பட்டதாக பதிவாகியுள்ளது.

இதன் கொட்டு சாதாரண தேனீ அல்லது குளவி கொட்டைவிட ஆபத்தானதல்ல என்றாலும், கூடுகளுக்கு அருகில் செல்லாமல், அவற்றை நிபுணர்கள் மூலம் மட்டுமே அகற்ற அனுமதிக்க வேண்டும் என்றும், குறிப்பாக ஒவ்வாமை உள்ளவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் நகராட்சி அறிவுறுத்தியுள்ளது.




# மது போதையில் விமானத்தை இயக்க முயன்ற SWISS விமானிகள் இடைநீக்கம்

ஜெனீவாவிலிருந்து புறப்படவிருந்த Airbus A220 விமானத்தை மது போதையில் இயக்க முயன்றதாகக் கூறப்படும் இரண்டு சுவிஸ் விமானிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2026 மே மாதம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், விமானிகளின் நிலையை அவதானித்த சக பணியாளர்கள் உடனடியாக மேலதிகாரிகளுக்குத் தகவல் வழங்கினர். இதையடுத்து, இருவரும் பணியாளர் விடுதியிலேயே பணியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக வேறு விமானிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் விமானத்தின் கட்டுப்பாட்டு அறைக்குள் நுழையவில்லை என சுவிஸ் தெரிவித்துள்ளது.

விமானப் பாதுகாப்பு விதிகளின்படி, பணியின் போது விமானிகள் மது அருந்தியிருக்கக் கூடாது. இந்த விதிமீறல் தொடர்பாக நிறுவனத்தின் உள் விசாரணை நடைபெற்று வருகிறது. மறு அறிவித்தல் வரை இருவரும் விமானப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# வெப்ப அலை: சுவிட்சர்லாந்தில் அணுமின் நிலையங்கள் பாதிப்பு

பேர்ன்: சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்சில் நிலவும் கடும் வெப்ப அலை காரணமாக பல அணுமின் நிலையங்களின் மின் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளதுடன், சில உலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சுவிட்சர்லாந்தின் பெஸ்னாவ் அணுமின் நிலையத்தின் இரண்டு அணு உலைகளும் கடந்த ஜூன் மாதம் நிறுத்தப்பட்டன. ஆறுகளின் நீரின் வெப்பநிலை அதிகரித்துள்ளதால், நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுமின் நிலையங்களின் குளிர்விப்பு நீரை முழுமையாக மாற்ற முடியாது என்பதால், எதிர்காலத்தில் அதிகரிக்கும் வெப்ப அலைகள் அணுசக்தி உற்பத்திக்கு மேலும் சவாலாக அமையக்கூடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.






# முதியோர் பராமரிப்பு இல்லங்களில் பல் சுகாதாரம் ஏன் முக்கியம்?

வயது அதிகரிக்கும்போது ஈறுகள் பின்வாங்குதல், பற்களின் வேர்ப்பகுதி வெளிப்படுதல், பல் சொத்தை மற்றும் ஈறு அழற்சி போன்ற பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது. செயற்கைப் பற்களையும் தினமும் முறையாகச் சுத்தம் செய்யாவிட்டால் வலி மற்றும் தொற்றுகள் ஏற்படலாம்.

வாய்ச் சுகாதாரம் பற்களை மட்டுமல்லாமல் முழு உடலையும் பாதுகாக்கிறது. ஈறுகளில் ஏற்படும் தொற்றுக் கிருமிகள் இரத்தத்தில் கலந்து நுரையீரல் அழற்சி, இதய நோய்கள் மற்றும் நீரிழிவு தொடர்பான சிக்கல்களின் அபாயத்தை அதிகரிக்கலாம். சில மருந்துகள் வாயில் உமிழ்நீர் சுரப்பதைக் குறைப்பதால் பல் சொத்தை விரைவாக ஏற்படக்கூடும்.

முதியோர் பராமரிப்பு இல்லங்களில் பணியாளர்கள் தினமும் இருமுறை பல் துலக்க நினைவூட்டுவதுடன், பற்கள், ஈறுகள் மற்றும் செயற்கைப் பற்களில் ஏற்படும் மாற்றங்களையும் கண்காணிக்கலாம். பற்களுக்கு இடையிலான பகுதிகளைச் சிறிய பிரஷ் அல்லது பல் நூல் மூலம் சுத்தம் செய்வதும் அவசியம்.

செயற்கைப் பற்களைத் தினமும் சுத்தம் செய்து, இரவில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். கைவிரல்களின் வலிமை குறைந்தவர்களுக்கு மின்சாரப் பிரஷ் அல்லது தடிமனான கைப்பிடியுள்ள பிரஷ் உதவியாக இருக்கும். பல் பிரஷை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றுவதுடன், பல் மருத்துவர் மற்றும் பல் சுகாதார நிபுணரிடம் முறையான பரிசோதனை மேற்கொள்வதும் முக்கியம்.

தினசரி வாய்ச் சுகாதாரத்தில் கவனம் செலுத்துவது முதியோரின் உணவு உண்ணும் திறன், உடல் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதுடன், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அதிக மருத்துவச் செலவுகளையும் குறைக்க உதவும்.

# ஆறு மாத மகப்பேறு விடுப்பு கோரி 1.10 இலட்சம் பேர் ஆதரவு

தற்போதுள்ள 14 வார மகப்பேறு விடுப்பை ஆறு மாதங்களாக அதிகரிக்கக் கோரி, 110,000 பேரின் கையெழுத்துகளுடன் மனுவொன்று சுவிஸ் கூட்டாட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




குழந்தையின் ஆரம்ப வளர்ச்சி, தாய்ப்பால், உணர்வுபூர்வமான பிணைப்பு மற்றும் பாதுகாப்புக்கு தற்போதைய 98 நாட்கள் போதுமானதல்ல என மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். பிரசவத்திற்குப் பின்னர் தாய்மார்கள் உடல் மற்றும் மன ரீதியாக மீளவும் போதுமான காலம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



# மௌனம் கலைத்த எம்போலோ; இன்னும் வலிமையாகத் திரும்புவோம்

உலகக் கிண்ணக் காலிறுதியில் ஆர்ஜென்டினாவிடம் தோல்வியடைந்த பின்னர், சுவிட்சர்லாந்து அணியின் வீரர் பிபீல் எம்போலோ முதன்முறையாக ரசிகர்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்டினாவுக்கு எதிரான ஆட்டம் 1-1 என சமநிலையில் இருந்தபோது, தவறான முறையில் பெனால்டி பெற முயன்றதாகக் கூறி எம்போலோவுக்கு இரண்டாவது மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. இதனால் 72ஆவது நிமிடத்தில் அவர் மஞ்சள்-சிவப்பு அட்டையுடன் வெளியேற்றப்பட்டார். பத்து வீரர்களுடன் விளையாடிய சுவிட்சர்லாந்து, மேலதிக நேரத்தில் 1-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வியை ஏற்றுக்கொள்ள எனக்குச் சிறிது காலம் தேவைப்பட்டது. நான் உணரும் ஏமாற்றத்தை விவரிக்க இன்னும் வார்த்தைகள் இல்லை, என எம்போலோ Instagram பதிவில் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டியில் சுவிஸ் அணியின் செயல்பாடு ரசிகர்களைப் பெருமைப்படுத்தியிருக்கும் என நம்புவதாகக் கூறிய அவர், நாட்டுக்காகவும் ரசிகர்களுக்காகவும் வீரர்கள் முழுமையாகப் போராடியதாகத் தெரிவித்தார்.

இந்தத் தோல்வி வேதனையானது. ஆனால் அது எங்களைத் தீர்மானிக்காது. சுவிட்சர்லாந்து இன்னும் பெரிய தருணங்களுக்குத் தகுதியானது. நாங்கள் தொடர்ந்து போராடுவோம்; மேலும் வலிமையாகத் திரும்புவோம், என எம்போலோ உறுதியளித்துள்ளார்.





# சுவிட்சர்லாந்தின் தேசிய தினம்

# சுதந்திரம், ஒற்றுமை, நடுநிலைமையின் அடையாளம்

### சிறப்புக் கட்டுரை

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 ஆம் தேதி, உலகின் மிகவும் நிலையான ஜன நாயக நாடுகளில் ஒன்றாக விளங்கும் சுவிட்சர்லாந்து, தனது தேசிய தினத்தை பெருமையுடன் கொண்டாடுகிறது. இது வெறும் விழா நாள் மட்டுமல்ல; சுதந்திரம், ஒற்றுமை, நடுநிலைமை மற்றும் மக்கள் ஆட்சியின் மகத்துவத்தை நினைவுகூரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும்.

### 1291-ல் தொடங்கிய வரலாறு

1291 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத தொடக் கத்தில், உரி (Uri), ஸ்விட்ஸ் (Schwyz), உன்டர்வால்டன் (Unterwalden) ஆகிய மூன்று மலைப் பகுதிகள் ஒன்றிணைந்து வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு எதிராக பரஸ் பர பாதுகாப்பு உடன்படிக்கையில் கையெ ழுத்திட்டன.

இந்த Federal Charter of 1291 என்ற உடன்படிக்கையே இன்றைய சுவிட்சர்லாந் தின் பிறப்புச் சான்றாகக் கருதப்படுகிறது. அந்த வரலாற்று ஒப்பந்தத்தின் நினை வாகவே ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 தேசிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### பல மொழிகள் - ஒரே நாடு

சுவிட்சர்லாந்தின் தனிச்சிறப்பு அதன் பன்முகத்தன்மை. ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலிய மற்றும் ரோமன்ஷ் என நான்கு தேசிய மொழிகள் பேசப்படும் இந்த நாடு, மொழி, மதம், கலாசாரம் ஆகிய வேறு பாடுகளைக் கடந்தும் ஒற்றுமையுடன் வாழும் உலகின் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

### நடுநிலைமையின் பெருமை

பல நூற்றாண்டுகளாக சுவிட்சர்லாந்து தனது நடுநிலைக் கொள்கையை உறுதி யாகப் பின்பற்றி வருகிறது. உலகப் போர் களிலும் எந்தப் பக்கத்திலும் இணைந்து போரிடாமல் அமைதியை முன்னிறுத்திய நாடாக இது அறியப்படுகிறது. அதனால் உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற் றதோடு, பல சர்வதேச அமைப்புகளின் தலைமையகமாகவும் சுவிட்சர்லாந்து திகழ்கிறது.

### மக்களே நாட்டின் அதிகாரம்

சுவிட்சர்லாந்தின் அரசியல் அமைப் பின் மிகப்பெரிய பலம் நேரடி ஜனநா யகம். முக்கியமான தேசிய முடிவுகளில்



## சுவிட்சர்லாந்தின் தேசிய தினம்

# சுதந்திரம், ஒற்றுமை, நடுநிலைமையின் அடையாளம்

மக்கள் நேரடியாக வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர். இதனால் மக்களே நாட்டின் இறுதி முடிவெடுப்பவர்கள் என்ற கொள்கை நடைமுறையில் செயல்படுகிறது.

### தேசிய தினக் கொண்டாட்டங்கள்

ஆகஸ்ட் 1 அன்று நாடு முழுவதும்:

★ தேசியக் கொடி ஏற்றுதல்
★ தேசிய கீதம் பாடுதல்
★ ஊர்வலங்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள்
★ மலைச்சிகரங்களில் தீபக்கோபுரங்கள் ஏற்றுதல்
★ வாணவேடிக்கை
★ குடும்ப ஒன்றுகூடல்கள்
★ பாரம்பரிய இசை மற்றும் நாட்டுப்புற நிகழ்ச்சிகள்

என பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும்.

### வில்லியம் டெல் - சுதந்திரத்தின் சின்னம்


சுவிட்சர்லாந்தின் தேசிய உணர்வுடன் இணைந்திருக்கும் வரலாற்று நாயகன் வில்லியம் டெல். அநீதிக்கு எதிராக துணிச்சலுடன் நின்ற அவரது கதை, சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையின் அடையாளமாக இன்றும் மக்களால் போற்றப்படுகிறது.

### முடிவுரை

சுவிட்சர்லாந்தின் தேசிய தினம் என்பது வெறும் அரசாங்க விழா அல்ல. அது சுதந்திரம், ஒற்றுமை, ஜனநாயகம், நடுநிலைமை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய உயரிய விழுமியங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் ஒரு தேசிய உறுதிமொழி.

735 ஆண்டுகளைக் கடந்த வரலாற்றை பெருமையுடன் சுமந்துவரும் சுவிட்சர்லாந்து, உலக நாடுகளுக்கு அமைதி, நல்லாட்சி மற்றும் மக்கள் பங்கேற்பின் சிறந்த முன்னுதாரணமாக தொடர்ந்து விளங்கி வருகிறது.

பல மொழிகள் பல கலாசாரங்கள் ஆனால் ஒரே நாடு – அதுவே சுவிட்சர்லாந்து.



# சூரிச்சில் மேலும் 40 குடும்பங்களுக்கு வீடு காலி செய்ய அறிவிப்பு

சூரிச், – சூரிச் நகரில் வாடகை வீடுகளை காலி செய்யுமாறு வழங்கப்படும் அறிவிப்புகள் தொடர்பான சர்ச்சைகள் தொடர்கின்றன. ஹார்ட்பிளாட்ச் பகுதியில் சுமார் 300 குடும்பங்களுக்கு வெளியேறும் அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில், தற்போது யோசெப்ஷ்ட்ராஸ்ஸே பகுதியில் அமைந்துள்ள மூன்று குடியிருப்பு கட்டடங்களில் வசிக்கும் மேலும் 40 குடும்பங்களும் வீடுகளை காலி செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யோசெப்ஷ்ட்ராஸ்ஸே 200, 200அ மற்றும் 202 ஆகிய முகவரிகளில் உள்ள குடியிருப்புகளின் வாடகை ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கட்டடங்களை நிர்வகிக்கும் HB Real Estate நிறுவனம், சர்வதேச ரியல் எஸ்டேட் நிறுவனமான குச்திடூடூண் குழுமத்துடன் இணைந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டடங்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். ஜன்னல்கள், சமையலறை மற்றும் வெப்ப வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அம்சங்களில் குறைபாடுகள் எதுவும் இல்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

எனினும், கட்டடங்களின் நீண்டகால பெறுமதியைப் பாதுகாப்பதற்கும், வசதிகளை மேம்படுத்துவதற்கும் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. வெப்பக் காப்பு, புதிய ஜன்னல்கள், வெப்பப் பம்புகள் மற்றும் பால்கனிகள் உள்ளிட்ட சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ள போதிலும், அனைத்து வாடகையாளர்களும் கட்டாயமாக வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுப்பிப்புப் பணிகளுக்குப் பின்னர் புதிய வாடகையாளர்களிடம் அதிக வாடகை அறவிடும் நோக்கமே இந்த நடவடிக்கைக்கு காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை வாடகையாளர் அமைப்புகள் மற்றும் அரசியல் வட்டாரங்கள் முன்வைத்து வருகின்றன.

சுவிட்சர்லாந்தில் மலிவான வாடகை வீடுகளின் பற்றாக்குறை அதிகரித்து வரும் நிலையில், இவ்வாறான பெருமளவு வெளியேற்றங்கள் வீட்டு வசதி தொடர்பான விவாதங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன.

அண்மையில் நிராகரிக்கப்பட்ட வீட்டுப் பாதுகாப்பு முன்மொழிவு (Wohnschutz&Initiative) அமலுக்கு வந்திருந்தால், இத்தகைய வெளியேற்றங்களைத் தடுக்க முடிந்திருக்கும் என சில தரப்பினர் கருத்து வெளியிட்டுள்ளனர். இதேவேளை, தேசிய அளவில் முன்வைக்கப்படவுள்ள வாடகைக் கட்டுப்பாட்டு முன்மொழிவு மீதும் தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



சின்னத்தம்பி
குருபரன்

# பன்முக ஆளுமை கொண்ட ஓய்வுநிலைக் கொத்தணி அதிபர்

## கலாபூசணம் சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம்

வாழ்க்கை என்பது ஒருவரோடு மாத்திரம் நிறைவுறுவதில்லை. அவர் இறந்த பின்னரும் சரித்திரமாகப் பேசப்பட வேண்டும். வாழ்க்கைக் கடலில் திண்டாடித் தத்தளித்து நிறபவருக்கு 'உனக்கும் கீழே உள்ளவர் போடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு' என்ற கண்ணதாசனின் பாடலடி ஆசுவாசப்படுத்த உதவும். இதுவே மனித வாழ்க்கையின் சூட்சுமமாகும். இந்த இயற்கையில் எல்லாம் கொட்டிக் கிடக்கிறது. 'வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்' வாழ நினைத்தவனுக்குச் சொர்க்கம். வாழ முடியாதவனுக்கு நரகம் போன்றது இவ்வுலகம். பயிற்சி, முயற்சி, அனுபவம், உழைப்பு, ஆற்றல், விடாமுயற்றி இருந்தால் எதையும் சாதித்து விடலாம். அப்படிப்பட்டவருக்கே இந்த இயற்கை (உலகம) சொந்தமானது. அவருக்கே வாய்ப்புக்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கும். அவரே வாழ்க்கையில் சாதனைகள் புரிலார். 'இவன்பால யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' இவ்வகைப்பட்டவர் வாழ்க்கையில் தடம் பதித்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருப்பார். இத்தகையவர்கள் சிலரே உள்ளனர்.



நமது வாழ்க்கை நம் கையில்தான் இருக்கிறது. நமது வாழ்க்கையை நாமே திட்டமிட்டு நாமே அவ்வாழ்க்கையை வாழ வேண்டும். இன்னொருவரின் தலையிடும், அளவுகடந்த நம்பிக்கையும் நம்மை திசை திருப்பித் திசை மாற்றிவிடும. அவரைப்போல், இவரைப் போல், அந்தமாதிரி, இந்தமாதிரி என வாழ ஆரம்பித்தால் வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகிவிடும். சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு நமது வாழ்க்கையை நாமே வாழ வேண்டும். பேராசை கொள்ளாமல் கிடைப்பதைக் கொண்டு, இலக்குடன் வாழ்பவர் மாத்திரமே மகிழ்ந்சியாக வாழவார். பேராசை கொள்ளாமல் கட்டுக்கோப்பாக பன்முக ஆளுமை கொண்டு தமது குடும்பத்துக்காகவும் சுமூகத்துக்காகவும் தான் ஏற்றுக் கொண்ட பணிக்காகவும் அர்ப்பணிப்போடு வாழ்ந்தபரே ஓய்வுநிலைக் கொத்தணி அதிபர் சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம் ஆவார். சிறந்த ஆசிரியராக, அதிபராக, சமூக சேவகராக, ஆன்மீகச் சொற்பொழிவாளராக, பட்டிமன்ற நடுவராக, பண்ணுடன் திருமுறை




ஓதுபவராக, எழுத்தாளராக, அகில இலங்கை சமாதான நீதிவானாக, பல ஆலயங்கள், சமூக நிறுவனங்களில் பல பதவிகள் வகித்த ஒருவராக, சிறந்த குடும்பத் தலைவனாக, எனது குருவாக, மேலதிகாரியாகப் பல விருதுகளுக்குச் சொந்தக்காரராகவும் மும்மொழித் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) தேர்ச்சி பெற்றவராகவும் சந்திரசேகரம் அவர்களை நான் பார்க்கிறேன்.

திருவாளர் சந்திரசேகரம் மட்டக்களப்பு, களுதாவளை என்னும் பழம் பெரும் கிராமத்தில் சபாபதிப்பிள்ளை கந்தம்மை தம்பதியரின் ஒன்பதாவது இறுதிப் புதல்வராக 30.10.1938 இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியைக் மட்/களுதாவளை இராமகிருஷ்ணமிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும், கனிஷ்ட இடைநிலை ஆங்கில மொழி மூலக் கல்வியைக் களுதாவளை கனிஷ்ட வித்தியாலயத்திலும் (களுதாவளை மகா வித்தியாலயம்), சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை மட்/சிவாநந்தா வித்தியாலயத்திலும் கற்று, 1955 திசெம்பரில் சிரேஷ்ட இடைநிலைத் தராதரப் பத்திர (குகுஇ) பபீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்தார். 1958-1960 காலப் பகுதியில் குண்டகசாலை விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் கற்று விவசாய டிப்ளோமா பட்டம் பெற்றார். பட்டம் பெற்றும் அரச தொழிலுக்காக நான்கு வருடம் காத்திருந்த வேளையில் விவசாயம், மரக்கறித் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். அவர் பெற்ற விவசாயப் பயிற்சி சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு அத்துறையில் வெற்றி காண்பதற்குப் பேருதவியாய் இருந்தது.

ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பபீட்சையில் சித்தியடைந்து 15.07.1964 இல் ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் பெற்று மட்/களுதாவளை இரதமகிருஷ்ண மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டார். ஆசிரியர் பயிற்சிக்கான போட்டிப் பபீட்கையில் சித்தியடைந்து மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் பாட ஆசிரியராகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது அம்பாறை ஹாடி உயர் தொழினுட்பக் கல்வி நிறுவனத்தில் நடாத்தப்பட்ட விவசாய ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டுப் பயிற்சியின் நிறைவில் விவசாய விஞ்ஞான பாட ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1970-1972 வரை மட்/முதலைக்குடா ஸ்ரீகோபால் மகாவித்தியாலயத்தில் (முதலைக்குடா மகா வித்தியாலயம்) விவசாய விஞ்ஞான ஆசிரியராகக் கடமை ஏற்று, விவசாய விஞ்ஞான பாடத்துடன புவியியல் பாடத்தையும் சிறப்பாகக் கற்பித்தார். அவரிடம் கற்ற பெரும்பாலான மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பபீட்சையில் இரு பாடங்களிலும் திறமைச் சித்திகளைப் பெற்றனர். தா.சிதம்பரப்பிள்ளை, அழகு. குணசீலன், குமரகுரு, செல்வநாயகம், கணேஸ்வரி, சி.சிவபாதசுந்தரம், கலையரசி, ந.குணலெட்சுமி போன்றோரைக் குறிப்பிடலாம்.

இடமாற்றம் கிடைத்ததும் மட்/களுதாவளை மகா வித்தியாலயத்திற்குச் சென்று 01.01.1973 -31-12-1977 வரை பணியாற்றிய காலப்பகுதியில் (07.04.1975) முதலைக்குடாவைச் சேர்ந்த கறுத்தாப்போடி இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி மங்கையவல்லியைத் திருமணம் செய்து, இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார். இல்லற வாழ்க்கையின் பேறாக 1982.02.19 இல் ஏகபுத்திரியாக பிரேமப்பிரியா பிறந்தார். 01.01.1978 முதல் 14.07.1995 இல் ஓய்வு பெறும்வரை முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் 1990 திசெம்பர் முதல் கொத்தணி அதிபரகப் 18 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றார். 1978, 1979 காலப் பகுதியில் சமூகக்கல்வி, விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களைச் சந்திரசேகரம் அவர்களிடம் கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைதது.



அதேபோல் அவர் அதிபராக இருந்தபோது முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் 1991 -1993 இல் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அப்போது மண்முனை தென மேற்குக் கோட்டத்தில் இருந்த 13 பாடசாலைகளுக்கான கொத்தணிப் பாடசாலை அதிபராகப் பணியாற்றிச் சிறந்த சேவையாற்றினார். அவர் கொத்தணி அதிபராக இருந்த காலத்தில் கற்சேனை அ.த.க.பாடசாலை, கொல்லனுலை விவேகாநந்தா வித்தியாலயம் ஆகியன புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

மண்முனை தென் மேற்கு, கொக்கட்டிச் சோலைப் பிரதேசத்தில் 1982 ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப பபீட்சையில் சித்தியடைந்தவராக மேனாள் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் அமரர் பேராசிரியர் மானாகப்போடி செல்வராஜா (முனைக்காடு) காணப்பட்டார். அவரைத் தொடர்ந்து இரண்டாவதாக 1990 இல் அப்பபீட்சையில் சித்தியடைந்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சிலும் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் பிரதிக் கல்விப் பணிப்பாளாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு.சிந்தாத்துரை வரதசீலன் (முனைக்காடு) காணப்பட்டார். அவர்களைப் போன்று 1990 நடைபெற்ற முதலாந்தர அதிபர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பபீட்சையில் சித்தியடைந்த மன்முனை தென் மேற்குப் பிரதேசத்தின் முலாவது நபராகத் திரு சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் கொள்ளப்படுகின்றார்.

எவருடனும் முரண்பட்டுச் செல்லாது, புத்திசாதுரியமாகச் செயற்பட்டுச் சென்றதனால் பபீட்சையில் சித்தியடைந்தவுடன் வழங்கப்பட்ட அதிபர் நியமனத்துடன் பதவி உயர்வாக மண்முனை தென்மேற்குப் பிரதேசப் பாடசாலைகளின் கொத்தணி அதிபர் நியமனமும் அவருக்குக் கிடைத்தது. உள்நாட்டு யுத்தக் கெடுபிடிகள் அதிகரித்திருந்த காலப் பகுதியில் படித்தவர்கள், வசதி படைத்தவர்கள், அரச பதவிகளில் உள்ளவர்கள் படுவான்கரைப் பிரதேசத்தில் இருந்து நகரப்புறங்களை நாடி இடம்பெயர்ந்த போதிலும் சந்திரசேகரம் அவர்கள் அப்பிரதேசத்தில் இருந்து உந்துருளி இல்லாத அக்காலப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று மன்முனை தென் மேற்குப் பிரதேசப் பாடசாலைகளைத் தரிசித்து முகாமை செய்து வந்தார். அப்பிரதேசத்தையும் மக்களையும் மாணவர்களையும் நேசித்ததன் காரணமாக 50 வருடங்களுக்கு மேலாக அரச பணியில் இருந்த போதும், பணி ஓய்வு பெற்ற பின்னரும் தன்னால் முடிந்தவரை கல்வி, சமய, சமூக, ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

சந்திரசேகரம் அவர்கள் எப்போதும் பொது நலன் பற்றியே பேசுவார். 2025 இறுதி வரை கல்வி, சமூக, சயப் பொதுப் பணிகளில் சளைக்காது ஈடுபட்டு வந்தார். கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்திலுள்ள கிராம மக்களின் நன்மதிப்பைப் பெற்றதனால் சகரும் அவரை மரியாதையோடு ஐயா என்றே அழைத்தனர். பொது வாழ்க்கையில் முதலைக்குடா பாலையடி விநாயகர், கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையில் ஆறு ஆண்டுகள் தலைவராகவும் பின்னர் போசகராகவும், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் உப தலைவராகவும், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்லரர் ஆலயத்தில் கணக்குப் பரிசோதனைக் குழு உறுப்பினராகவும், முனைக்காடு ஒளிக்கல்லூரி நிறுவன ஆலோசகராகவும் பல பதவிகளில் இருந்து சிறப்பான பணியாற்றினார். அப்பிரதேசத்திலுள்ள சகல ஆலயங்களிலும் திருமுறை (திருவாசகம், திருமந்திரம்) முற்றோதல் நிகழ்வுகளில் பங்கு கொண்டு சகலரினதும் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறார். அத்தோடு அப்பிரதேசத்திலுள்ள பல ஆலயங்களின் திருவிழாக் காலங்களில் பஞ்சபுராணம் பண்ணோடு பாடுவதில் பிரதானமான ஒருவராகவும் காணப்பட்டார். கரகாட்டம், வசந்தன் ஆடல் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்ததோடு பல நூல்களுக்குப் பல்துறை சார்ந்த வகையிலான கட்டுரைகளையும் எழுதி இருக்கிறார். அதனால் அவருக்குப் பல விருதுகள் கிடைத்திருக்கின்றன.

சந்திரசேகரம் அவர்கள் ஆற்றிய கல்வி, சமூக, சமய, இலக்கியப் பணிகளுக்காகப் பல விருதுகள், கௌரவங்கள், பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார். தினக்குரல், தென்றல் FM (பண்பலை) வானொலி ஆகியவற்றின் அனுசரணையுடன் மண்முனை தென் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் 18.03.2012 இல் நடாத்திய ‘சாதனையாளர் கௌரவிப்பு’ விழாவின்போது அவர் 35 வருடங்களுக்கு மேலாகக் கல்வி, சமூகப் பணிக்காக ஆற்றிய நற்பணிகளுக்காக ‘சேவைச் செம்மல்’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மட்டக்களப்பு பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய, சமூக அபிவிருத்தி ஒன்றியம் 31.03.2012 இல் நடாத்திய ‘மண்கமழும் மங்கல விழா’ வின் போது சந்திரசேகரம் அவர்கள் அப்பிரதேசத்தில் ஆற்றிய ஆன்மீகப் பணிக்காக ‘ஆன்மீகக் குரல்’ எனும் விருது வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.



மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகம் 29.12.2015 இல் நடாத்திய பிரதேச கலாசார விழாவின்போது சந்திரசேகரம் அவர்கள் அப் பிரதேசத்தில் ஆற்றிய ஆன்மீகப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக 'ஆன்மீகச் சுடர்' விருது விழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட தேசிய கலாசார அரச விருது வழங்கும் விழாவின்போது சமய, கலாசாரம், இலக்கியம் என்பவற்றின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகளைக் கௌரவித்து 15.12.2016 அன்று 'கலாபூசணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

உருவத்தில் அகத்தியர் திரைப்படத்தில் வரும் சீர்காளி கோவிந்தராசன் போன்ற தோற்றமுடைய சந்திரசேகரம் அவர்கள் உடல், செரல், பொருள், மெய்களால் யாருக்கும் தீங்கிழைக்காத தூய்மையான மனம் கொண்டவர். பண்பானவர், கல்வி, சமய, ஆன்மீகச் சொற்பொழிவாளர், பல நிகழ்வுகளை முன்னின்று நடத்திப் பலராலும் பாராட்டப்பட்டிருக்கிறார். பல பட்டிமன்றங்களுக்கு நடுவராகவும் பேச்சாளராகவும் செயற்பட்டிருக்கிறார். மண்முனை தென் மெற்குப் பிரதேச செயலக, பிரதேச கலாசார விழா ஆண்டு மலர்களிலும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றிஸ்வரர் ஆலய 'தேரோட்டம்' (1998) மலரிலும், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப் பிள்ளையார் கொயில் குடமுழுக்கு 'தாந்தா மலைமாடசி' மலரிலும் முதலைக்குடா மகாவித்தியாலய ஐம்பதாவது ஆண்டு விழா மலர், இவை தவிர வேறு பல மலர்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். 88 வயதில் உடல் தளர்ந்து 21.06.2026 இல் மரணமடைந்தார்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் பதவியில் இருந்தபோதும் பொது வாழ்க்கையிலும் தர்க்கம், கருத்து முரன்பாடுகள் ஏற்பட்ட போதெல்லாம் தான் முரனபடாமல் சமாதானமாகப் போய் எதையும் தீர்த்துக் கொள்ள முனைவார். அன்பாகப் பேசிப் பழகுவார். எந்த வேளையிலும் அவர் முகத்தல் அவருக்கேயுரிய புன்சிரிப்புக் காணப்படும். அன்பான மனைவி, பண்பான மகள், குணமான மருமகன் சண்முகம் பார்த்தீபன் அவர்களுடன் ரஜீவினி, பூஜாவினி, கிருவர்சன் ஆகிய மூன்று பேரப் பிள்ளைகளுடனும் சந்தோசமாக வாழ்ந்து, தனது பொதுப் பணிகளையும் மேற்கொண்டு வந்தார். தனது மகளின் கணவன் சண்முகம் பார்த்தீபனின் இறப்பு (2022) அவரை வெகுவாகப் பாதித்தது. இருந்தும் 'நடப்பது நடந்தே தீரும்' என்ற நம்பிக்கையோடு இயல்பாகவே வாழப் வழகிக் கொண்டார்.

ஆசிரியப் பணியை மிக வெற்றிகரமாக நிறைவேற்றியது போல் அவரால் அதிபர் விர்வாக, முகாமைத்துவப் பணியினை மிகச் சிறப்பாகக் கொண்டு நடத்த முடியவில்லை. எதற்கும் கோபப்படாமல் விட்டுக் கொடுத்துச் சமாதானமாகப் போகும் இயல்பான சுபாவம் பாடசாலை அதிபர் முகாமைத்துவத்தில் சிலவேளை சவாலாகவும் அமைந்தன. இதுவும் சிலவேளை முகாமைத்துவத்தில் ஒருவகையான பலவீனமாகவே கொள்ளப்படும். எப்போதும் ஒருவரின் பலம் மற்றவரின் பலவீனத்துக்கூடாகவே கட்டி எழுப்பப்படும். இதனை நன்கு இனங்கண்டு கொண்ட சில ஆசிரியர்கள் அவரைத் தமது போக்குக்குப் பயன்படுத்திக் கொண்டதுமுண்டு. அதனால் பலரோடு முரண்பட வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டன.

இதனை அவருக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகமாகப் பலரும் அப்போது கூறினர். அது மாத்திரமின்றி 30.10.1998 பதவியில் இருந்து ஓய்வு பெறவேண்டிய அவரை அக்கால உகப்பற்ற சூழல் கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தித்து 15.07.1995 இல் ஓய்வு பெறச் செய்தது. இதற்கு அவருடன பணியாற்றிய ஒரு சில ஆசிரியர்களும் கொத்தணிப் பாடசாலைகளின் ஒரு சில அதிபர்களும் காரணமாக இருந்தனர். அவர் முன்கூட்டி ஓய்வு பெறாமல் வேறு ஒரு பிரதேசப் பாடசாலை ஒன்றுக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தால் 1997 இல் கல்வி அமைச்சினால் அதிபர்களுக்கென மறுசீரமைக்கப்பட்ட சம்பளத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அதன் பலனை ஓய்வூதியத்திலும் அனுபவித்திருப்பார். இதைப் பற்றியெல்லாம் கவலையும்படாமல் குடும்பம், கல்வி, சமூக, சமய, ஆலயத் திருப்பணியென 'இதுவும் கடந்து போகும்' என்ற மன நிறைவோடு வாழப் பழகிக் கொண்டார். இத்தகைய பன்முக ஆளுமை கொண்ட அவரின் அர்பணிப்பான வாழ்க்கை சமூகத்துக்குச் சிறந்ததோர் முன்னுதாரணமாகும்.

'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' (கீதாசாரம்)



# சுவிட்சர்லாந்தில் வீட்டு உரிமையாளருடன் ஏற்படும் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது?

சுவிட்சர்லாந்தில் பொருத்தமான வாடகை வீடொன்றைக் கண்டுபிடிப்பது எளிதான விடயமல்ல. குறிப்பாக Zrich, Geneva, Lausanne, Basel போன்ற நகரங்களில் வீடுகளுக்கான தேவை அதிகமாக இருப்பதால், நல்ல வீடு கிடைத்தவர்கள் அதனைத் தக்கவைத்துக் கொள்ளவே விரும்புகின்றனர். இதனால் வீட்டு உரிமையாளர் அல்லது கட்டிட நிர்வாக நிறுவனத்துடன் கருத்து முரண்பாடு ஏற்படுவதைப் பெரும்பாலான வாடகையாளர்கள் தவிர்க்க முயற்சிப்பார்கள்.

ஆனால் வீட்டுப் பழுதுபார்ப்பு, வாடகை அதிகரிப்பு, கூடுதல் செலவுகள், சலவை அறைப் பயன்பாடு, இரவு நேர அமைதி விதிமுறைகள் அல்லது வீட்டைவிட்டு வெளியேறுதல் போன்ற விடயங்களில் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உணர்ச்சிவசப்படாமல், சட்டபூர்வமாகவும் ஆதாரங்களுடனும் செயல்படுவது மிகவும் முக்கியமானது.

## வாடகை ஒப்பந்தத்தை முழுமையாகப் படியுங்கள்

வீட்டு உரிமையாளருக்கும் வாடகையாளருக்கும் இடையிலான உறவு சட்டத்தாலும் வாடகை ஒப்பந்தத்தாலும் வரையறுக்கப்படுகிறது. எனவே, வீட்டை வாடகைக்கு எடுப்பதற்கு முன்பு ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து விதிமுறைகளையும் கவனமாகப் படிக்க வேண்டும்.

வீட்டில் ஏற்படும் பழுதுகளைச் சரிசெய்ய வேண்டியது யார், அதற்கான செலவை யார் ஏற்க வேண்டும், மாதாந்திர வாடகைக்கு மேலதிகமாக வசூலிக்கப்படும் செலவுகள் என்ன, சலவை அறையை எப்போது பயன்படுத்தலாம், இரவு நேர அமைதி விதிமுறைகள் எவை போன்ற கேள்விகளுக்கு முன்கூட்டியே விளக்கம் பெற்றுக்கொள்வது நல்லது.

ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படாத விடயங்கள் இருந்தால், கையெழுத்திடுவதற்கு முன்னரே வீட்டு உரிமையாளர் அல்லது நிர்வாக நிறுவனத்திடம் எழுத்துப்பூர்வமாகக் கேட்க வேண்டும். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் பிரச்சினையைத் தீர்ப்பதைவிட, முன்னதாகவே சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவது எளிதானது.

## இரவு 10 மணிக்குப் பிறகு கழிப்பறையைப் பயன்படுத்த முடியாதா?

சுவிட்சர்லாந்தில் இரவு நேர அமைதி விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. இருப்பினும், இரவு 10 மணிக்குப் பிறகு கழிப்பறையில் தண்ணீரைப் பாய்ச்சக்கூடாது என்று சிலர் நம்புகின்றனர். இது பொதுவாக உண்மையல்ல.

அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான கழிப்பறை மற்றும் குளியலறைப் பயன்பாட்டை முற்றாகத் தடுக்க முடியாது. ஆனால் அண்டை வீட்டாருக்குத் தேவையற்ற தொந்தரவை ஏற்படுத்தும் அளவுக்கு அதிக சத்தம் செய்யாமல் கவனமாக இருக்க வேண்டும். கட்டிடத்தின்



தனிப்பட்ட வீட்டு விதிமுறைகளையும் வாடகையாளர்கள் மதிக்க வேண்டும்.

### முதலில் சுமுகமாகப் பேசுங்கள்

வாடகைக் காலத்தில் பிரச்சினை ஏற்பட்டால், முதலில் வீட்டு உரிமையாளர் அல்லது கட்டிட நிர்வாக நிறுவனத்துடன் அமைதியாகப் பேசி தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

வீட்டு உரிமையாளரை நேரடியாக அறிந்திருந்தால், சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து பிரச்சினையை விளக்கலாம். பல வாடகையாளர்கள் நிர்வாக நிறுவனங்கள் மூலமாகவே வீடுகளைப் பெற்றிருப்பதால், அவர்களிடம் எழுத்துப்பூர்வமாகத் தொடர்புகொள்வதே சிறந்தது.

பிரச்சினை என்ன, அது எப்போது ஆரம்பித்தது, இதனால் ஏற்பட்ட பாதிப்பு என்ன, நீங்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்ன என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மரியாதையான கடிதமொன்றை அனுப்ப வேண்டும். முக்கியமான புகார்களைப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புவது பாதுகாப்பானது. இதன் மூலம் கடிதம் அனுப்பப்பட்டதும், அது பெற்றுக்கொள்ளப்பட்டதும் பின்னர் நிரூபிக்க முடியும்.

### அனைத்து ஆதாரங்களையும் பாதுகாத்து வையுங்கள்

வீட்டில் நீர்க்கசிவு, பூஞ்சை, வெப்பமூட்டும் சாதனப் பழுது அல்லது வேறு சேதங்கள் இருந்தால், அவற்றைப் புகைப்படம் மற்றும் காணொளியாகப் பதிவு செய்து வைக்க வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது நிர்வாக நிறுவனத்துடன் நடைபெற்ற மின்னஞ்சல் உரையாடல்கள், கடிதங்கள், ரசீதுகள் மற்றும் தொலைபேசி உரையாடல்களின் தேதிகளையும் பாதுகாப்பது முக்கியம்.

பிரச்சினை பின்னர் சமரச அதிகார சபைக்குச் சென்றால், இந்த ஆவணங்களே உங்கள் கோரிக்கைக்கு முக்கிய ஆதாரங்களாக அமையும்.

### சமரச அதிகார சபையின் உதவியை நாடலாம்

நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்காவிட்டால், வாடகையாளர் அல்லது வீட்டு உரிமையாளர் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் வாடகைத் தகராறுகளுக்கான சமரச அதிகார சபையை அணுகலாம்.

இது ஜெர்மன் மொழியில் குchlichtungs-beh5rde, பிரெஞ்சு மொழியில் Autorit de conciliation, இத்தாலிய மொழியில் Autoritö di conciliazione என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் வாடகையாளர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்களுக்கு இடையிலான தகராறுகளை விசாரிப்பதற்கான அமைப்பு உள்ளது.

இந்த அதிகார சபை இருதரப்பினரையும் அழைத்துப் பேசி, நீதிமன்றத்திற்குச் செல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை ஏற்படுத்த முயற்சிக்கும். இதற்காக வாடகை ஒப்பந்தம், கடிதங்கள், புகைப்படங்கள், கட்டண விவரங்கள் மற்றும் பிற ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கலாம்.

### வாடகையாளர் சங்கங்கள் வழங்கும் உதவி

சுவிட்சர்லாந்தில் வாடகையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சங்கங்களும் இயங்குகின்றன. ஜெர்மன் மொழிப் பகுதிகளில் இவை பொதுவாக Mieterverband என்றும், பிரெஞ்சு மொழிப் பகுதிகளில் அகுஃஙிஇஅ என்றும் அழைக்கப்படுகின்றன.

இந்தச் சங்கங்களில் உறுப்பினராக இணைவதன் மூலம் வாடகை ஒப்பந்தத்தைச் சரிபார்த்தல், வாடகை உயர்வு சட்டபூர்வமானதா



என்பதை ஆராய்தல், பழுதுபார்ப்புக்கான பொறுப்பு யாருக்கு உள்ளது என்பதை விளக்குதல் மற்றும் வீட்டு நிர்வாகத்துக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களைத் தயாரித்தல் போன்ற உதவிகளைப் பெறலாம்.

தேவையான சந்தர்ப்பங்களில் சமரச நடவடிக்கைகளிலும் சட்டபீதியான அடுத்த கட்டங்களிலும் ஆலோசனை வழங்கப்படலாம். எனினும் வழங்கப்படும் உதவியின் அளவு, உறுப்பினர் விதிமுறைகள் மற்றும் பிராந்திய நடைமுறைகளைப் பொறுத்து மாறுபடலாம்.

**தன்னிச்சையாக வாடகைப் பணத்தை நிறுத்தாதீர்கள்**

வீட்டில் குறைபாடு இருப்பதால் கோபமடைந்து வாடகைப் பணத்தை நேரடியாகச் செலுத்தாமல் நிறுத்துவது ஆபத்தானது. இது வாடகை நிலுவையாகக் கருதப்பட்டு, இறுதியில் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் நிலைக்கும் வழிவகுக்கலாம்.

வீட்டின் குறைபாட்டால் வாடகையைக் குறைக்க வேண்டுமென்றாலும் அல்லது பணத்தைத் தற்காலிகமாகத் தடுத்து வைக்க வேண்டுமென்றாலும், சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அதற்கு முன்பு வாடகையாளர் சங்கம் அல்லது சமரச அதிகார சபையிடம் ஆலோசனை பெறுவது சிறந்தது.

காலக்கெடுவைக் கவனத்தில் கொள்ளுங்கள்

வாடகை அதிகரிப்பு, ஒப்பந்த ரத்து அறிவிப்பு அல்லது வேறு அதிகாரபூர்வ முடிவு கிடைத்தால், அதனை எதிர்ப்பதற்குச் சட்டத்தில் குறுகிய காலக்கெடு இருக்கலாம். எனவே அத்தகைய கடிதங்களைப் பெற்றவுடன் தாமதிக்காமல் நிபுணத்துவ ஆலோசனையை நாட வேண்டும்.

அதிகாரபூர்வ அறிவிப்புகளைப் புறக்கணிப்பது அல்லது கடைசி நாள்வரை காத்திருப்பது வாடகையாளரின் உரிமைகளைப் பாதிக்கக் கூடும்.

அமைதியான அணுகுமுறையே சிறந்த தீர்வு

சுவிட்சர்லாந்தில் வீட்டு உரிமையாளருக்கும் வாடகையாளருக்கும் சட்டபீதியான உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன. எனவே மிரட்டல், அவமதிப்பு அல்லது கோபமான உரையாடல்கள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குமே தவிர தீர்வைக் கொண்டுவராது.

முதலில் ஒப்பந்தத்தையும் விதிமுறைகளையும் சரியாகப் புரிந்துகொண்டு, பின்னர் அமைதியான பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். தீர்வு கிடைக்காவிட்டால் எழுத்துப்பூர்வமான புகார், வாடகையாளர் சங்கத்தின் ஆலோசனை மற்றும் மாநில சமரச அதிகார சபையின் உதவி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

சரியான ஆவணங்கள், தெளிவான தொடர்பு மற்றும் சட்டபூர்வமான அணுகுமுறை இருந்தால், பெரும்பாலான வாடகைத் தகராறுகளை நீதிமன்றத்திற்குச் செல்லாமலேயே தீர்த்துக் கொள்ள முடியும்.



# சுவாமி விபுலானந்த அடிகளாரின் 79 வது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் அனுஸ்டிப்பு!

**எஸ்.எஸ்.அமிர்தகழியான்**

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 79 வது சிரார்த்த தின நிகழ்வுகள் (19) மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் அனுஸ்டிக்கப்பட்டது.

கல்லடி – உப்போடை மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சமாதியில் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனின் உதவிப் பொது முகாமையாளர்

பிரம்மஜானந்தா ஜீ மகஹராஜ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபை தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா, மட்டக்களப்பு வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் முத்துகுமார் செல்வராசா மற்றும் சிவானந்தா தேசிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

அடிகளாரது சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து ‘வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ’பாடல் இசைக்கப்பட்டு சிரார்த்த தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்தோடு சிவானந்தா தேசிய பாடசாலையின் மாணவர்களின் பங்கேற்புடன் சுவாமியின் திருவுருவ படம் தாங்கியவாறு மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதி வழியாக ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் உள்ள நீரூற்று பூங்காவில் அமைந்துள்ள முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவம்பாக்கியநாதன் அவர்கள் கலந்து கொண்டு அடிகளாரின் திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டு வின்சன்ட் உயர்தர மகளீர் தேசிய பாடசாலை மாணவிகளினால் ‘வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ’ பாடல் பாடப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி, இந்துக் கல்லூரி, மகாஜன கல்லூரி, புனித மிக்கேல் கல்லூரி மற்றும் ஆணைப்பந்தி இந்து மகளீர் கல்லூரி ஆகியவற்றின் மாணவ மாணவிகளும் அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# மலையகத்தில் முதல் தடவையாக சுவாமி விபுலானந்தரின் 79 வது சிரார்த்த தினக் கொண்டாட்டம்!

**( பூண்டுலோயாவிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)**

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 79வது சிரார்த்த தினம் மலையகத்தில் முதல் தடவையாக (19) ஞாயிற்றுக்கிழமை காலை கோலாகலமாக நடைபெற்றது .

பூண்டுலோயா விவேகானந்த மகா வித்தியாலயத்தில், வித்தியாலய அதிபர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் மிகவும் சிறப்பாக வரலாற்றில் முதல் தடவையாக ஒஸ்கார் நிறுவிய சுவாமி சிலை முன்றலில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்காரின்) முன்னாள் தலைவர் கந்தசாமி பத்மநாதன் முதல் தடவையாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்து கலந்து சிறப்பித்தார். அவரது பாரியார் திருமதி ராஜேஸ் பத்மநாதனும் கலந்து சிறப்பித்தார்.

அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்காரின்) முன்னாள் தலைவர் கந்தசாமி பத்மநாதன் முன்னெடுப்பில், கடந்த (07.02.2026) அன்று வரலாற்றில் முதல் தடவையாக அங்கு சுவாமிகளின் திருவுருவச் சிலைகள் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அங்கு நிறுவப்பட்ட சுவாமி விபுலானந்தரின் சிலை முன்றலில் முதல்தடவையாக 79 வது சிரார்த்த தின விழா நேற்று முன்தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் சுவாமிகளின் 'வெள்ளைநிற மல்லிகையோ.. ' என்ற பாடலை பாடியதுடன், மாணவி சுவாமி விபுலாநந்தர் தொடர்பான சிறப்பு பேச்சையும் பேசினர் . நட்சத்திர அதிதி ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி

சகாதேவராஜா சுவாமிகள் தொடர்பான சிறப்புரை நிகழ்த்தினார் .

கௌரவ அதிதியாக லண்டனில் இருந்து வந்து கலந்து சிறப்பித்த உதயன் பாஸ்கரன்( காரைதீவு)ஒரு தொகுதி நலிவுற்ற மக்களுக்கு, சொந்த செலவில் வஸ்திர தானம் செய்துவைத்தார்.

சிலை நிறுவி, வஸ்திரங்கள் வழங்கி ,அன்னதானமளித்து பாரிய சேவைசெய்த பிரதம அதியான அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்காரின்) முன்னாள் தலைவர் கந்தசாமி பத்மநாதனுக்கு, அதிபர் ரவீந்திரன் நட்சத்திர அதிதி சகாதேவராஜா முன்னிலையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

சிறப்பு அதிதிகளாக காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் உ.தேவதாஸ், சமூக செயற்பாட்டாளர் த.கிரிஷானந்த் ஆகியோரு கலந்து கொண்டனர்.

முன்னதாக சுவாமிகளின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மங்கல விளக்கேற்றி புஷ்பாஞ்சலியும் செலுத்தப்பட்டது .

மலையக வரலாற்றில் பூண்டுலோயாவில் இவ் விழா முதல் தடவையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் முதல் தடவையாக சுவாமி விபுலானந்தரின் 79 வது சிரார்த்த தினக் கொண்டாட்டம்!













# பேசாலை மும்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் சென்.மேபீஸ்– விக்றரிஸ் மற்றும் அமலதாசன் ஆகிய மூன்று முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய முன்றலில் சனிக்கிழமை (18.07) மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி எஸ்.சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மறைமாவட்ட கறிற்றாஸ் மற்றும் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி ஜ<sup></sup>ெ.அன்ரனிற்ரோ அருள்ராஜ் அடிகளார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

விஷேட மற்றும் சிறப்பு அதிதிகளாக பேசாலை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி திருமதி. துர்சிக்கா சில்வா– பேசாலை சென்.பற்றிமா மத்திய மகா வித்தியாலய அதிபர் ஏ.ஏ.ஜே. ஆனந்தன் குரூஸ்– பேசாலை சென்.மேபீஸ் வித்தியாலய அதிபர் திருமதி.ஜே.எஸ்.விவியான் பீபீஸ் மற்றும் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கின் மேய்ப்புப்பணி சபை செயலாளர் எந்திரி திரு.தேவதாசன் கிறிஸ்றி டோமினிக் துரம் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த மும்பள்ளிகளிலும் கற்றுவரும் 165 இச்சிறார்களின் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை பார்வையிடுவதற்காக இப்பகுதியிலுள்ள பெருந் தொகையான பெற்றோர் சிறியோர் என பலரும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.










# மதுபாவனைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும் செட்டிபாளயம் 'உவகை' இன் ஒரு வருட நிகழ்வும் கௌரவிப்பும்!



எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மதுபாவனைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும் மட்டக்களப்பு பிராந்திய நிலையமான செட்டிபாளயத்தில் இயங்கும் 'உவகை' இன் ஒரு வருட நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வு (20) மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இன் நிகழ்வு, பிராந்திய மனநல வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். டான் சௌந்தரராஜாவின் ஒருங்கமைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரனின் தலைமையில் நடை பெற்றது

மனநலம் மற்றும் உள-சமூக நல்வாழ்வை மேம்படுத்தும் பணிகளில் அர்ப்பணிப்புடனும் சிறப்புடனும் சேவையாற்றி வரும் செட்டிப்பாளையம் பிராந்திய மதுபான புனர்வாழ்வு நிலையத்தின் பணியாளர்களை கௌரவிக்கும் நோக்கில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் அடங்கலான 10 பேருக்கு விருது வழங்கப்பட்டது.







# வெலிக்கடை சிறை இனப்படுகொலையும், சிலை திறப்பும்




வெலிக்கடை சிறையில் இனப்படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை இருவரின் சிலை எதிர்வரும் 25/07/2026, ல் யாழ்ப்பாணம் வல்வட்டித்துறையில் திறக்கப்படுவது வரவேற்கத்தக்க விடயம்.

1983, யூலை,23, தொடக்கம் யூலை,30, வரை இலங்கை தலைநகர் கொழும்பு உட்பட தென்பகுதியில் ஜே .ஆர் ஜெயவர்தன, பிரதமர் ஆர் பிரமதாசா ஆகியோரின் கூட்டு இனப்படுகொலையில் 1983, யூலை,25, யூலை,27, ஆகிய இரு தினங்கள் வெலிக்கடை சிறையில் 53, தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

அதில் குட்டிமணி,தங்கத்துரை இருவரின் சிலைகள் மட்டுமே 43, ஆண்டுகளுக்கு பின்னர் சிலைகள் நிறுவி திரைநீக்கம் செய்யப்படுவதை பாராட்டபட வேண்டும்.

ஆனால்..?

வெலிக்கடை சிறையில் உயிர் நீத்த 54, தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்களை அந்த சிலை அமைக்கப்படும் சுற்றுவட்டத்தில் கருங்கல்லில் பெயர்களை பொறிப்பது இன்னும் சிறப்பாக அமையும்.

**வெலிக்கடைச் சிறையில்
கொல்லப்பட்ட 54, பெயர் விபரங்கள்.**

**1983,யூலை,25, ல்
கொல்லப்பட்டவர்கள்.**

1. தங்கத்துரை என்று அழைக்கப்படும் நடராசா தங்கவேல்.
2. குட்டிமணி என்று அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன்.
3. ஜெகன் என்று அழைக்கப்படும் கணேஷானந்தன் ஜெகநாதன்
4. தேவன் என்று அழைக்கப்படும் செல்லத்துரை சிவசுப்பிரமணியம்
5. சிவபாதம் மாஸ்டர் என்று அழைக்கப்படும் நவரத்தினம் சிவபாதம்
6. செனட்டர் என்று அழைக்கப்படும் வைத்திலிங்கம் நடேசுதாசன்
7. அருமைநாயகம் என்றும் சின்னராஜா என்றும் அழைக்கப்படும் செல்லத்துரை ஜெயரெத்தினம்.
8. அன்ரன் என்று அழைக்கப்படும் சிவநாயகம் அன்பழகன்
9. ராசன் என்று அழைக்கப்படும் அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம்
10. சுரேஷ் மாஸ்டர் என்று அழைக்கப்படும் காசிப்பிள்ளை சுரேஷ்குமா.
11. சின்னத்துரை அருந்தவராசா.
12. தேவன் என்றும் அரபாத் என்றும் அழைக்கப்படும் தனபாலசிங்கம் தேவகுமார்
13. மயில்வாகனம் சின்னையா
14. சித்திரவேல் சிவானந்தராஜா




15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16. தம்பு கந்தையா
17. சின்னப்பு உதயசீலன்.
18. கணேஷ் என்றும் கணேஷ்வரன் என்றும் அழைக்கப்படும் கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன்
19. கிருஷ்ணபிள்ளை நாகராஜா.
20. கணேஷ் என்று அழைக்கப்படும் கணபதி கணேசலிங்கம்
21. அம்பலம் சுதாகரன்
22. இராமலிங்கம் பாலச்சந்திரன்
23. பசுபதி மகேந்திரன்.
24. கண்ணன் என்று அழைக்கப்படும் காசிநாதன் தில்லைநாதன்
25. குலம் என்று அழைக்கப்படும் செல்லப்பா குலராஜசேகரம்.
26. மோகன் என்று அழைக்கப்படும் குமாரசாமி உதயகுமார்.
27. ராஜன் என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் சிவகுமார்.
28. ராஜன் கோதண்டபிள்ளை தவராஜலிங்கம்
29. கொழும்பான் என்று அழைக்கப்படும் கருப்பையா கிருஷ்ணகுமார்.
30. யோகன் என்று அழைக்கப்படும் ராஜயோகநாதன்.
31. அமுதன் என்றும் அவுடா என்றும் அழைக்கப்படும் ஞானசேகரன் அமிர்தலிங்கம்.
32. அந்தோணிப்பிள்ளை உதயகுமார்.
33. அழகராசா ராஜன.
34. வேலுப்பிள்ளை சந்திரகுமார்.
35. சாந்தன் என்று அழைக்கப்படும் சிற்றம்பலம் சாந்தகுமார்

**1983,யூலை, 27, ல் கொல்லப்பட்டவர்கள்**

1. தெய்வநாயகம் பாஸ்கரன்
2. பொன்னம்பலம் தேவகுமார்
3. பொன்னையா துரைராசா
4. முத்துக்குமார் ˆபீகுமார்
5. அமிர்தநாயகம் பிலிப்குமாரகுலசிங்கம்
6. செல்லச்சாமி குமார்
7. கந்தசாமி சர்வேஸ்வரன்
8. அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
9. சிவபாலம் நீதிராஜா
10. ஞானமுத்து நவரத்தின சிங்கம்
11. கந்தையா ராஜேந்திரம்
12. டாக்டர் ராஜசுந்தரம்
13. சோமசுந்தரம் மனோரஞ்சன்
14. ஆறுமுகம் சேயோன்
15. தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
16. சின்னதம்பி சிவசுப்பிரமணியம்
17. செல்லப்பா இராஜரட்னம்
18. குமாரசாமி கணேசலிங்கன்

வெலிக்கடை சிறையில் 35 +18=53, தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்களும் கருங்கல்லில் பொறிக்கப்படுவது நல்லது.

வெலிக்கடை சிறையில் உயிர் தப்பியவர்கள் இவர்கள் மொத்தம் 19, பேர் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர்.

**அப்படித் தப்பிய எஞ்சிய 19 தமிழ்க் கைதிகள்**

1. அந்தோனிப்பிள்ளை (அழகிரி)
2. மாணிக்கம் தாசன்
3. கணேசலிங்கன்
4. ˆபீதரன்
5. டக்ளஸ் தேவானந்தா
6. தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்
7. சிவசுப்பிரமணியம்
8. ஞானசேகரம் (பரந்தன் ராஜன்)
9. பாபுஜி
10. டேவிட் ஐயா
11. வண.குரு சின்னராஜா
12. கோவை மகேசன்
13. ஜெயகுலராஜா
14. மு.நித்தியானந்தன்
15. ஜெயதிலகராஜா
16. டாக்டர் தர்மலிங்கம்
17. வண.பிதா சிங்கராயர்
18. யோகா எனப்படும் எஸ்.யோகராஜா
19.நிர்மலா நித்தியானந்தன்.

1983 செப்டம்பர் 23 ,ல் மட்டக்களப்பு சிறைச்சாலை உடைப்பக்கப்பட்டு வெலிக்கடை சிறையில் இருந்து கொண்டுவரப்பட்ட 19, தமிழ் அரசியல் கைதிகள் உட்பட ஏற்கனவே மட்டக்களப்பு சிறையில் இருந்த கைதிகள் உட்பட 41, பேர் சிறையில் இருந்து மீட்கப்பட்டனர்.இந்த சிறை உடைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக அப்போதய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன கூறினார்.

இந்தப்பதிவு மறந்துவரும் வரலாற்றை மீளவும் இளைஞர்கள் அறிவதற்காகவே எனது பதிவு இது..!

**-பா.அரியநேத்திரன்.**

**21/07/2026**

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# பத்திரிகை

# வாரத்தில் ஒருமுறை உங்கள் கரங்களில் மின்னிதலாக...

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில் இணைய இங்கே தொடவும்....

CLICK HERE